fmpb youth wing

Vol 15- Issue 11-November 2022

for Young friends of fmpb

FRIENDS MISSIONARY PRAYER BAND

A Month Prayer Bulletin for Youth & Teens

அடிப்படை மூல சத்தியம் **11**

*புதிய வானம் புதிய பூமி*

# புதிய வானம் புதிய பூமி

Private Circulation Only



# 21 ஆம் நூற்றாண்டு நீதிமொழிகள்

1. என் மகனே, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து,
2. என் கட்டளைகளையும், போதகத்தையும் கண்மணிபோல் காத்துக்கொள்; அப்பொழுது பிழைப்பாய்
3. அவைகளை உன் விரல்களில் கட்டி, உன் இருதயப்பலகையில் எழுது,
4. ஞானத்தைப்பார்த்து நீ என் சகோதரி, என்று சொல்.
5. ஆசை காட்டும் விபச்சாரக்காரனுக்கு அது உன்னை விலக்கிக் காக்கும்.
6. என் வீட்டின் ஜன்னலருகே நின்று பார்த்தபோது,
7. பேதையருக்குள்ளே ஒரு புத்தியற்ற நங்கையைக் கவனித்தேன்.
8. அவள் பள்ளியிலிருந்து திரும்பி டியூஷன் முடித்துவிட்டு, அவன் வீட்டருகே நடந்து போனாள்.
9. மாலை மயங்கும் நேரத்தில் இருளில் சென்றாள்.
10. அப்பொழுது ஒரு வாலிபன், டிசர்ட்டும் ஜீன்சும் அணிந்து கொண்டு அவளைச் சந்திக்க வந்தான். வாயில் ஒரு சிகரெட்டு.
11. அவன் வாயாடியும் அடங்காதவனுமானவன்; ஊர் சுற்றுபவன்.
12. சில வேளை வீதியில், சில வேளை பஸ் ஸ்டாப்பில் இருப்பான்.
13. ஒரு சந்திற்கு அவளை அழைத்துச்சென்று, முத்தமிட்டு,
14. நீ எவ்வளவு நல்லவள் என்று கவனித்தேன், அப்படிப்பட்ட பெண்ணுக்காக ஆவலோடு காத்திருந்தேன்.
15. எனவேதான் ஓடி வந்தேன், உன்னை கண்டுபிடித்தேன்.
16. வீட்டிற்கு வா, பயப்பட எதுவுமில்லை. செஸ் விளையாடலாம்.
17. பெற்றோரைக் குறித்துக் கவலை வேண்டாம்; பொய் சொல்லி அவர்களை ஏமாற்றிவிடலாம்.
18. நீ இல்லாமல் என்னால் வாழவே முடியாது. நீ என்னை ஏற்றுக்கொள்ளாவிடில் தற்கொலை செய்து கொள்வேன்.
19. என் பெற்றோர் வீட்டில் இல்லை, நாளைதான் வருகிறார்கள். எனக்கு அவர்களது அன்பே கிடையாது. அன்பிற்காய் ஏங்குகிறேன்.
20. உன்னை மணந்து என் வாழ்வின் அரசியாக்குவேன் என்றான்.
21. தன் இனிய சொற்களால் அவளை வசப்படுத்தினான். தன் உதடுகளின் தேனொழுகும் வார்த்தைகளால் அவளை இணங்கப்பண்ணினான்.
22. ஓர் ஆடு அடிக்கப்படும்படிச் செல்வது போலும், ஒரு குருவி தன் உயிரை வாங்கும் கண்ணிக்கு விரைவது போலும், அவன் பின்னாலே போனாள்.
23. அம்பு அவளது ஈரலைப் பிளந்து, கண்ணியில் விழுந்த மான் ஆனாள்.
24. இப்பொழுதும் மகள்களே, கவனியுங்கள்; நான் சொல்வதைக் கேளுங்கள்.
25. உங்கள் இருதயம் அவன் வழிக்குக் சாய வேண்டாம்; அவன் பாதையிலே மயங்கித் திரியாதீர்.
26. அவன் அநேகப் பெண்களைக் கெடுத்தவன்; ஆம் ஆன்மீக நங்கையர் பலரும் அவன் கண்ணியில் சிக்கினர்.
27. அவன் அன்பு நரகத்திற்குப் போகும் நெடுஞ்சாலை, வீணடிக்கப்பட்ட வாழ்க்கைக்குக் கொண்டுசெல்லும் பெருவழி.

Dr. Lilian Stanley

## கேரீத்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

## VISION

To reach the spheres of India & to imbibe the heavenly manna to our youth, who are the future pillars of "our Nation".

எல்லைகள் கடந்து நம் எதிர் கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரம மன்னாவை விதைக்க.

சிந்தனைக் கூர் கொண்டு இந்தியம் மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## OBJECTIVE

A monthly magazine to strengthen the Prayer Cells...

ஜெபக்குழவை வலுப்படுத்தும் மாத இதழ்

Produced, Layout & Design by

**fmpb youth & teens wing**

www.fmpbyouth.org

kerithmagazine@fmpb.org

Youth & Teens Wing
29, High School Road
Ambattur, Chennai - 53
Ph : 044-26570404 Extn 266

தனிப்பிரதி ரூ.25/-
ஆண்டு சந்தா ரூ.250/-

சந்தா மற்றும் முகவரி மாற்றத்திற்கு கூப்பிடுங்க

Cell : 9445040148
PH : 9360698617

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும் ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளும் ஜெபக்குறிப்புகளும் நான்கு வாரங்களாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது, நான்கு வார ஜெபக்குறிப்புகளையும் தடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம்.

ஜெக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெபநேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனைய பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதியதகவல்களுடன் உங்களைமாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு

**அறைகூவல்**

பயன்படுத்தவும்


கிறிஸ்துவின் பிரியர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்!

வேதாகமம் மாட்சிமை மிகுந்த படைப்பு நிகழ்வுகளோடு தொடங்கி கடவுள் புதிய வானம், புதிய பூமியை படைக்கும் நிகழ்வோடு முடிவடைகிறது. ஏசாயா தீர்க்கதரிசி உரைப்பது இதோ புதிய வானத்தையும், புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன். முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதில்லை, மனதிலே தோன்றுவதில்லை என்கிறார் (ஏசா 65 : 17) ஏசாயா கண்ட தரிசனத்தை நான் இப்பொழுது காண்கிறேன் என யோவான் கூறுகிறார்.

நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன். இதில் உணர்த்தப்படும் உண்மை, இந்த உலகத்தில் இப்போதுள்ள எல்லா தீய செயல்பாடுகளும் ஓர் முடிவுக்கு வரும், எல்லாம் புதிதாகும் என புதிய நம்பிக்கை கிடைக்கிறது, கடவுளோடு வாழும் சிலாக்கியம் ஏற்படும் என்ற நம்பிக்கை நமக்கு கிடைக்கிறது.

அக்டோபர் மாதம் 1 முதல் 4 ஆம் தேதி வரை ஆந்திர மாநில பணித்தள விஜயம் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. முதன்முறையாக நமது பணித்தளத்திற்கு வந்த 4 வாலிபர்களும் மிஷனெரி ஊழியத்தைப் பற்றி தெளிவாகத் தெரிந்துக் கொள்ளவும், தங்களை அர்ப்பணிக்கவும் ஏதுவாக பணித்தளம் விஜயம் இருந்தது.

அக்டோபர் 8, 9 வாலிப தலைவர்களுக்கென நடத்தப்பட்ட தலைவர்கள் பயிற்சி கூடுகையில் நமது வாலிப தலைவர்கள் புதியவைகளை கற்றுக் கொள்ள, தெரிந்துக் கொள்ள, அதை செயல்படுத்துவதற்கு ஏதுவாக இருந்தது.

அக்டோபர் 16 (3வது ஞாயிறு) அன்று திருவள்ளூர் மண்டல வாலிபர்கள் மீண்டுமாக மாதாந்திர ஐக்கிய கூடுகையை தொடங்க கர்த்தர் கிருபை செய்தார்.

அக்டோபர் 22, 23 ஆகிய நாட்களில் பெங்களூருவில் நடைபெற்ற கர்நாடகா மாநில முகாமில் வாலிபர் கூடுகையில் வாலிபர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர். அவர்கள் சந்திக்கிற சமுதாய சவால்களை மேற்கொண்டு பரிசுத்தமாக கர்த்தருக்கென்று வாழ தீர்மானம் எடுக்கும் வகையில் கூடுகை நடைபெற்றது.

2023 ஜனவரி 14 முதல் 16 வரை நடைபெறவிருக்கிற பொன்விழா ஆண்டு வாலிபர் முகாமிற்காகத் தினந்தோறும் மறவாமல் ஜெபியுங்கள். திட்டமிடுங்கள், நமது வாலிப ஜெபக்குழு அங்கத்தினர்களோடு பங்கு பெறுங்கள்.

தேவ கரம் உங்களோடு இருந்து உங்களை பாதுகாத்து ஆசீர்வதித்து நடத்துவாராக.

கிறிஸ்துவின் பணியில்,

ஜெ. டேனியல் அருள்மணி




"இங்கு காலங்களை வரையறுக்க முடியாது. இதற்கு நிகழ் காலமோ, கடந்த காலமோ, வருங்காலமோ கிடையாது''. இந்த முதல் வரியை நீங்கள் புரிந்துக் கொண்டால் புதிய வானம், புதிய பூமியைக் குறித்து உங்களால் ஓரளவுக்கு புரிந்து கொள்ள முடியும் என்பதி லே எந்தவித சந்தேகமும் இல்லை. இந்த செய்தியில் இரண்டு வார்த்தைகள் அடிக்கடி உபயோகப்படுத்தப்படும் ஒன்று 'இல்லை' மற்றொன்று 'தெரியாது' இது தான் உண்மை இந்த இரண்டு வார்த்தைகளும் அதிகம் பயன்படுத்த வேண்டியது இருக்கும். முதல் வரியை மீண்டும் நீங்கள் வாசித்து உங்களால் யூகிக்க முடிகிறதா என்பதை நீங்கள் பரிசோதிக்க வேண்டும். புதிய வானம், புதிய பூமி நம்முடைய 16 மூல அடிப்படை கூறுகளில் ஒன்று. இது கடைசியும் கூட. ஆனால் நாம் இதை நவம்பர் மாதம் தியானிப்பதற்கு காரணம் திருச்சபையின் ஒழுங்குப்படி சகல ஆத்துமாக்களின் திருநாளும், சகல பரிசுத்தவான்களின் திருநாளும் அனுசரிக்கப்படுவதினாலே அதை நாம் இந்த மாதம் தியானித்து விட்டு கடைசியாக பிதாவின் வாக்குதத்தத்தை குறித்து தியானித்து இந்த ஆண்டுக்கான தலைப்பை நாம் நிறைவு செய்கிறோம்.

புதிய வானம், புதிய பூமி இது வெளி 21, 22ம் அதிகாரத்திலே காணப்படுகிறது. இது அலங்கரிக்கப்பட்ட மணவாட்டி(திருச்சபை) அதாவது நீங்களும் நானும்தான். இந்த இடத்தைக் குறித்து தான் அநேக வர்ணனைகள் சொல்லப்படுகிறது. பளிங்கைக்போல், இரத்தின கற்களை போல், 12 வகையான கற்கள் இவைகளையெல்லாம் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த உலகத்திலே நாம் பார்க்கும் இந்த 12 வகையான கற்களை பார்த்துவிட்டு அதே போல் மனதிலே நினைத்துக் கொள்ளக் கூடாது. இதை இந்த உலகத்திலே நாம் காண்கிறது இன்னும் சொல்ல போனால் அந்த கற்களை நாம் பூமியிலே கூட பார்த்திருக்க மாட்டோம். அப்படியென்றால் என்ன அர்த்தம்? அப்படிப்பட்ட ஒரு காட்சியை யோவான் பார்க்கிறான் என்பது தான். ஆனால் புதிய வானம் புதிய பூமியிலே நாம் நினைக்கிற தங்கம், அங்கு இருக்குமா என்பது தெரியாது தங்கத்தி லான ரோடு தங்கம் பூசப்பட்டிருக்கும். அப்படியென்றால் இங்குள்ள தங்கமா அதுவும் தெரியாது, இதைக்குறித்து இன்னும்நாம் படிக்கும் பொழுது அங்கு யாரெல்லாம் இருக்கமாட்டார்கள் என்று வெளி 21 : 8ல் 8 நபர்களை குறித்து சொல்லப்படுகிறது. அவர்கள் பங்கடைந்த பின்பு தான் இந்த புதிய வானம், புதிய பூமியை நாம் பார்க்கிறோம்.

இந்த புதிய வானம், புதிய பூமிக்கு ஒவ்வொரு திசைக்கும் 3 வாசல்கள் உண்டு என்று வர்ணிக்கப்படுகிறது. ஆனால் அது பூட்டப்படுவதில்லை. ஏனென்றால் அங்கு இராக்காலம் இராது. இங்கு சூரியன் இல்லை, சந்திரன் இல்லை, நட்சத்திரங்கள் இல்லை. சூரிய, சந்திர, நட்சத்திரங்களைக் தேவன் காலக்குறிப்புகளுக்காக உண்டாக்கினார். இது அங்கு இல்லை ஆட்டுகுட்டியானவரே விளக்கு. இப்பொழுது முதல்வரியைநீங்கள்யோசித்துபார்க்க வேண்டும். மேலும் இங்கு 12 கோத்திரங்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் 12 அப்போஸ்தலர்களுடைய பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கிறது மற்றும் அதனுடைய அளவு குறிக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நாம் வாசித்து நம்முடைய மனித கற்பனைக்குள்ளாக அந்த இடத்தை தீர்மானித்து விடக் கூடாது. ஏனென்றால் யோவானுக்கு மட்டுமே அது காட்டப்பட்டது. ஆனால் யோவானுக்கு கூட விளக்கப்படவில்லை. அவன் பார்த்ததை உங்களுக்கும் எனக்கும் விளக்குவதற்காக இந்த மனித வார்த்தைகளை பயன்படுத்திருக்கிறார். இதுதான் சரியான பொருள். இதை நாம் ஒரு கற்பனையைப் பண்ணிக் கொண்டால் இன்று நடக்கிறப்படி அநேகர் அங்கு சென்று வருவார்கள் சென்று வந்து அங்கு யாரெல்லாம் இருந்தார்கள் என்று சொல்வர்கள். இப்படி இருந்தது, அப்படி இருந்தது என்ற சொல்வார்கள். இவைகளில் ஒன்றையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் இன்னும் அது திறக்கப்படவில்லை. அதை நம்மால் விவரிக்க முடியாது. கற்பனையிலே பார்த்துவிட்டு வருவது தவறென்று நாங்கள் சொல்லவில்லை. அது உங்கள் உரிமை. வந்து அதை விளக்குவது தவறு. நாம் இப்படிப்பட்டவர்களுடைய செய்திகளை கேட்க ஆயத்தமாய் இருப்பது நம்முடைய தவறு. நாம் அதை விட்டு விலகுவோமானால் போய் வருகிறவர்கள் அந்த அனுபவத்தை சொல்லுவதையும் நிறுத்தி விடுவார்கள். நாம் அதை ஆர்வமாக கேட்பதினால் போய் வந்த கதையையும் அவர்கள் சொல்லிக் கொண்டு சந்தோஷமாக இருக்கிறார்கள். இதைக்குறித்து புதிய வானம், புதிய பூமியைக் குறித்து நீங்கள் எந்த ஒரு புத்தகத்தையோ விளக்க உரைகளையோ செய்தி களையோ கேட்டுத் தெரிந்துக் கொள்ள வேண்டாம். ஒரே ஒரு குறிப்பு வெளி 21, 22 மட்டுமே. இன்னொரு பணிவான ஒரு வேண்டுகோள் அந்த இடத்தில் வாழ்வதற்கு உங்களை தயார்படுத்திக்கொள்ளுங்கள்.

அங்கு மரணம் இல்லை, துக்கம் இல்லை, அலறுதல் இல்லை, வருத்தம் இல்லை, வியாதி இல்லை, கண்ணீர் இல்லை. இப்படிப்பட்ட ஒரு இடத்தில் வசிக்கும் பொழுது உங்களுக்கும் எனக்கும் வரும் அடுத்த ஒரு சந்தேகம் அங்கு விருட்சங்கள் (மரங்கள்) இருந்தன என்றும், அந்த மரங்கள் ஆரோக்கியம் தரும் கனிகளைத் தந்தது என்றும் வாசிக்கிறோம். அங்கு ஆரோக்கியம் கிடைக்கும் என்றால் அந்த இடத்திலே வியாதி இருந்ததா? அல்லது பெலவீனம் இருந்ததா? இல்லை அப்படியென்றால் ஏன் ஆரோக்கியம் தர வேண்டும் அது தெரியாது. நீங்கள் பார்க்கும் இந்த உலகத்திலுள்ள தண்ணீரைப் போல ஒரு ஜீவ ஆறு ஓடுமா? அதுவும் தெரியாது அந்த தண்ணீர் எப்படி இருக்கும் போனால் தான் தெரியும்.

நாம் பார்க்கும் இந்த தண்ணீரும், நாம் பார்க்கும் இந்த மரத்தையும் வைத்து நாம் அந்த இடத்தை முடிவு செய்யக் கூடாது, ஜீவ விருட்சம் என்று சொல்லப்படுகிறது. இது பூமியில் நாம் பார்க்கும் மரங்களை போல் இருக்குமா? என்பது நமக்கு தெரியாது. மொத்தத்தில் இந்த இடம் ரொம்ப! ரொம்ப!! ரொம்ப!!! நல்ல இடம். ஆனால் இந்த நல்ல என்ற வார்த்தையை விளக்குவதற்கு இந்த பூமியிலே எதுவும் இல்லை. இந்த இடம் ரொம்ப! ரொம்ப!! ரொம்ப!!! அழகான இடம் என்று சொல்லலாம். சரி ஆனால் அந்த அழகான என்பதை வர்ணிக்க இந்த பூமியில் அழகான ஒன்றும் இல்லை. அதை ஒப்பிட்டு சொல்ல இயலாது. ஒப்பிட்டு சொன்னால் நீங்கள் அதை மனதிலே வைத்து கற்பனை செய்துக் கொண்டிருப்பீர்கள். பின்பு அங்கு சென்று வந்தது போல் கனவும் காண்பீர்கள். இந்த தவறை நாங்கள் செய்ய வேண்டாம் என்று நினைக்கிறோம்.

தம்பி தங்கை புதிய வானம் புதிய பூமி முதல் வரி உனக்கு புரிந்திருந்தால் இதை நீ உணர்வதற்கு ஆயத்தம ாவாய் இல்லையென்றால், இந்த உலகத்திலேயே அதை கற்பனை செய்து கொண்டிருப்பாயேயொழிய அங்கு சென்றடையும் பாக்கியத்தைக் கூட ஒருவேளை இழக்க நேரிடும். அந்த இடம் ஆட்டுகுட்டியானவரின் வெளிச்சத்தால் நிறைந்திருக்கும். அங்கு தேவாலயம் கூட இல்லை. உடன்படிக்கை பெட்டியும் கூட இல்லை. இது இரண்டும் வெளி 11ல் இருந்ததாக யோவன் குறிப்பிடுகிறார். அதே யோவான் 10 அதிகாரம் கழித்து 21 ஆம் அதிகாரத்திலே தேவாலயம் இல்லை என்றும், ஆட்டுக்குட்டியானவரே விளக்கு என்றும் எழுதி முடிக்கிறார். அப்போஸ்தலர்களிலே பேதுரு மட்டும் 2 பேதுரு 3 : 13ல்புதிய வானம் புதிய பூமிக்காக காத்திருக்கிறோம் என்று எழுதுகிறார். அதோடு அவருடைய பணி முடிந்து விடுகிறது. அவர் கூட அதை குறித்து விளக்கவில்லை. இரக்கமுள்ள தேவன் கிருபையாக உங்கள் மேல் வைத்த அன்பினாலே யோவானுக்கு அதைக் காட்டி, வார்த்தையாக கடைசி 2 அதிகாரங்களில் எழுதி முடிக்கிறார். ஒன்றை புரிந்துக் கொள்ளுங்கள்.

இந்த மகா பெரிய கிருபை இதை வாசிக்கும் கிருபையும் அப்போஸ்தலர்களுக்கு கூட கிடைக்கவில்லை (பவுல் உட்பட). ஏனென்றால் யோவான் கண்டு எழுதிய அந்த தரிசனத்தை அவர்கள் வாசித்திருப்பார்களா? என்பதை நாம் உறுதியாகக் கூற முடியாது. ஆனால் அதை பரிசுத்த ஆவியானவர் அழகாக எழுதி உங்கள் கைகளிலே கொடுத்தி ருக்கிறார். நம் கைகளிலே அது இருக்கிறது. இதை பயத்தோடு நடுக்கத்தோடு வாசிப்போம். அந்த இடத்திற்கு செல்வதற்கு ஆயத்தமாவோம். இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று சொல்லுகிறார் காலம் சமீபமாயிருக்கிறது என்று சொல்லுகிறார். காலம் நிறைவேறுகிறது என்றும் சொல்லுகிறார். ஒன்று நிச்சயம் அப்போஸ்தலர்களின் காலங்களை விட நாம் மிக அருகில் இருக்கிறோம் என்பதுதான் உண்மை.

நித்திய நித்தியமாய் வாழும் அந்த இடம் புதிய வானம் புதிய பூமி இங்கு தான் நாம் நித்தியத்தை களிக்க இருக்கிறோம். இங்கு ஜனங்கள் எப்படி இருப்பார்கள் தெரியாது. அங்கு குடும்பங்கள் உண்டா தெரியாது. திருமணங்கள் உண்டா அங்கு பெண் கொள்வதும் இல்லை, கொடுப்பதும் இல்லை என்ற ஒரு வார்த்தை இயேசுவானவர் சொல்லுகிறார். ஒரு பெரும் பாக்கியம் தேவன் ஜனங்களோடு வாசம் பண்ணும் ஒரு இடம் அதாவது மனிதர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது என்பதே. அப்பொழுது இந்த பூமியும், வானமும் எப்படி இருக்கும் என்று தெரியாது. அதை விளக்குவதற்காக புதிய வானம், புதிய பூமி என்று போட்டு விட்டார்கள். அந்த புதிய வானம், புதிய பூமி எந்த நிலைமையில் இருக்கும் என்று தெரியாது. தேவன் இருக்கும் இடத்தில் பாவம் செய்ய எண்ணம் வராது. பாவத்திலிருந்து தப்பிப்பதற்கு நியாயபிரமாணம் தேவையில்லை. பாவம் செய்வதற்கு இடம் இருக்காது. சிந்தனையே இல்லையென்றால் அதற்கான பேச்சுக்கே இடமில்லை. இப்படிப்பட்ட ஒரு இடமாக வர்ணிக்கப்படுகிறது. இதுதான் ‘‘பரிசுத்த பூமி’’. நாம் அங்குதான் செல்ல போகிறோம். மரித்த பரிசுத்தவான்களும் மரித்த சகல கிறிஸ்துவுக்குள்ளான ஆத்துமாக்களும் நினைவுகூரும் நாட்களிலே அவர்களும் அந்த இடத்திலே வாழ்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். நாள் ஒன்று வரும் அன்றைக்கு தான் அவர்களும் அங்கு பிரவேசிப்பார்கள். இந்த புதிய வானம், புதிய பூமி முதல் வரியை மீண்டும் வாசித்து பாருங்கள் புரிகிறதா!!! தேவன் அதை உங்களுக்கு விளங்கப் பண்ணுவாராக. ஆமென்.

**- Mr.Isaac Kamalesh**



# புதிய வானம் புதிய பூமி

ஒரு விசுவாசி அல்லது கடவுளுடைய பிள்ளை என்றழைக்கப்படும் ஒருவருக்கு புதிய வானம் புதிய பூமி என்ற ஒன்று மிகவும் முக்கியமானது. நாம் வாழும் இப்பூமியும் இந்த வானமும் அழிந்த போகும் என்று வேதம் சொல்கிறது (2 பேதுரு 3:7). தேவன் நமக்காக புதிய வானத்தையும், புதிய பூமியையும் படைக்க இருக்கிறார். இந்த புதிய வானம் புதிய பூமியைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது என்று பார்க்கலாம்.

## புதியவானம் புதிய பூமி என்பது என்ன?

நாம் அறிந்தபடி தேவன் இவ்வுலகில் யாவையும் படைத்தார். இந்த உலகை ஆள்வதற்காக மனிதனையும் படைத்தார். தனது கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து தன் சித்தத்தை மனிதன் நிறைவேற்ற வேண்டுமென தேவன் எதிர்பார்த்தார். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. கடவுளின் சித்தத்தை நிறைவேற்றாமல் மனிதன் அவரை விட்டு தூரமாய் போனான். அவனது கீழ்ப்படியாமையினால் மனிதன் தனக்குக் கிடைத்த தெய்வீகத் தன்மையை இழந்து போனான். இறுதியில் இது முழு உலகத்தையும் பாதித்துவிட்டது. இப்பூமி கறைப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது. பாவம் உலகை ஆள ஆரம்பித்துவிட்டது. ஆனால் மனிதனின் இரட்சிப்புக்காக தேவன் ஒரு திட்டத்தை உருவாக்கிவிட்டார். ஆண்டவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு ஒரு நித்திய நம்பிக்கை இருக்கிறது. அவர்களுக்கு ஆத்தும இரட்சிப்பு மட்டுமல்ல. இவ்வுலகின் உபத்திரவங்கள் , பாடுகள் யாவற்றிலிருந்தும் ஒரு முழுமையான விடுதலையை கடவுள் அளிக்கிறார்.

தற்போது நாம் வாழும் இப்பூமியையும் நாம் காணும் இந்த வானத்தையும் ஆண்டவர் மாற்ற இருக்கிறார். வேதத்தில் பழைய ஏற்பாட்டிலேயே இதைப்பற்றி நாம் பார்க்கலாம். ஏசாயா 65:77 மற்றும் 66:22 ஆகிய வசனங்களை வாசித்து பாருங்கள். இயேசுவானவர் இவ்வுலகில் அவதரிக்கும் முன்னே கடவுளுடைய மனதில் இத்திட்டம் காணப்பட்டது. இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள். இந்த புதிய பூமியில் பங்கடைவார்கள்.

பரிசுத்தமற்றவர்களுக்கு அங்கு பங்கில்லை. பாவம், வேதனை மற்றும் கண்ணீர் அங்கு இருக்கப் போவதில்லை. நிலையான சந்தோஷம் மகிழ்ச்சியுடன் அங்கு வாழலாம். பாவத்தின் ஒரு நிழல் கூட அங்கு இருக்கப் போவதில்லை. அது முழுமையும் பரிசுத்தத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். சமாதானத்தையோ, சந்தோஷத்தையோ கெடுக்கும் எதுவும் அங்கு இருப்பதில்லை. மரணமும் இனி இல்லை. மீட்கப்பட்டவர்கள் யுகயுகமாய் வாழ்வார்கள் (ஏசா 51:11). வெளிபடுத்தல் 21:1ல் தேவன் யாவற்றையும் புதிதாக்குகிறார் என்று தேவதூதன் அறிவிக்கிறான். கடவுள் தன் மணவாட்டியாகிய சபையை இதற்காக ஆயத்தப்படுகிறார். எவ்வளவு மகிழ்ச்சியான ஒரு அனுபவம். புதிய பூமி, புதிய எருசலேமாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

தனது தரிசனத்திலே யோவான் கண்ட புதிய வானத்திலும், பூமியிலும் அவன் சமுத்திரத்தைக் காணவில்லை. பிசாசின் உதவியாளர்கள் சமுத்திரத்தி லிருந்து தான் தோன்றினார்கள் என்பது யூத மக்களின் ஒரு நம்பிக்கை. எனவே சமுத்திரம் இல்லை என்பது பிசாசு, பாவம் இவை புதிய வானம், புதிய பூமியில் இருக்கப்போவதில்லை என்பதை காட்டுகிறது. இருளற்ற ஒளிமயமான இந்த புதிய வானம், புதிய பூமியைப்பற்றி நாம் இன்னும் தியானிப்போம். நாமும் அந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளத் தகுதிபடுவோம்.

- Rev. David Ponding

# Hostel Life

நல்ல கல்வியும், ஒழுக்கமும் தேவை எனக்கருதி, பெற்றோர் தம் பிள்ளைகளை விடுதிகளில் சேர்த்துப் படிக்க வைப்பது இயல்பானதே. தங்களது வேலைப்பழுவின் நிமித்தமாகவும், பிள்ளைகளைத் தங்களால் சரிவரக் கவனிக்க இயலாத சூழலிலும், பெற்றோர் தம் பிள்ளைகளை விடுதியில் சேர்ப்பதுண்டு. என்னைப் பொறுத்தவரை பாடசாலைகளில் ஏட்டளவில் கற்க இயலாத பயனுள்ள பல நல்ல காரியங்களை விடுதியில் வாழும் மாணாக்கர் அனுபவப் பூர்வமாகக் கற்றுப் பலன் பெறுவர் எனத் திட்டமாய்க் கூறுவேன். அதேவேளையில், நாமனைவருமே பிரச்சினை நிறைந்த சூழலில் தான் வாழ்கிறோம்; விடுதி வாழ் மாணாக்கருக்கு மட்டும் பிரச்சினைகள் இருக்காதா என்ன? விடுதி வாழ் மாணாக்கர் குறிப்பாகக் கிறிஸ்தவ மாணாக்கர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன? ஆராய்வோமா!

பொதுவாக, விடுதிகளில் சேர்க்கப்படும் பிள்ளைகள், முதன்முறையாகப் பெற்றோரை, உறவினரைப் பிரிந்து வாழ வேண்டிய சூழலினால், தனிமையுணர்விலும், வீட்டைப் பற்றிய ஏக்கத்திலும் சிரமப்படுவது அனைவரும் அறிந்ததே. வீட்டிலே செல்லப் பிள்ளையாய் வாழ்ந்த சூழல் மாறி, கட்டுப்பாடான விடுதிச் சூழலில் வாழ நேரும்போது அவர்கள் துன்பமடைவதுண்டு. முன்பின் பழக்கமில்லாத மாணாக்கரோடு பழகுவதில் சிக்கலுண்டு. தங்களது நம்பிக்கையைப் போலல்லாது பிற தெய்வ நம்பிக்கையுள்ள சக மாணாக்கரோடு ஒரே அறையில் தங்க நேரிடும் வேளையில், அவர்கள் தங்களது தெய்வத்தின் உருவச் சித்திரங்களையும், சிலைகளையும் வைத்துப் பூஜிக்கும்போது அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். பல்வேறு தரப்பட்ட, பக்தியுள்ள, பழக்கம் கொண்ட உடன் வாழும் மாணவரோடு இசைந்து வாழும்படி தான் ஆண்டவர் நம்மை இவ்வுலகத்தில் வைத்திருக்கிறார். எந்தவித வித்தியாசமும் பாராது, அனைவரையும் நேசிப்பவர் நாம் ஆராதிக்கும் கர்த்தரல்லவா! எல்லோரும் தம் பிள்ளைகளாய் மாறவேண்டுமென்பதே அவரது சித்தமல்லவா! இதை நாம் உணர்ந்தால், இப்படிப்பட்ட மத, இன, மொழி பிரிவினைகளால் நமக்குப் பிரச்சினை இல்லை. தங்களோடு ஒரே அறையில் விடுதியில் தங்கியிருந்த சக கிறிஸ்தவ மாணவர்களது பக்தியான, ஒழுக்கமான, வெற்றியான வாழ்க்கையைக் கண்டு, அவர்களோடு அதே அறையில் தங்கியிருந்த பிற மதம் சார்ந்த மாணவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராகக் கண்டு, அவருக்குச் சாட்சிகளாய் ஏன், அவரது ஊழியக்காரர்களாய்கூட மாறினதை அநேக முறை என் வாழ்வில் கண்டிருக்கிறேன். விடுதிவாழ் மாணவருக்குப் பொறுமையும், சகிப்புத்தன்மையும், பிறர்பால் அன்பும் அவசியம் தேவை.

தம் வீடுகளில் வசதியோடு வாழ்ந்தவர்கள், தாங்கள் விரும்பிய தங்களுக்குப் பிடித்த, உணவை உண்டு பழகியவர்கள் விடுதியில் வாழ நேரும்போது, அனைவருக்கும் பொதுவான கழிப்பறை, குளியலறைகளைப் பயன்படுத்துவதும், பிடிக்காத உணவு வகைகளைச் சாப்பிட்டே ஆக வேண்டியதும் பிரச்சனையே. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, இவை பழகிப்போகும் என்பதில் ஐயமில்லை. ஒருதாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகளே ஒத்துப்போகாத, இசைந்து வாழ முடியாத நிலையிலிருக்கும்போது, பல்வேறு குணநலன்கள் கொண்ட சக மாணவரோடு சேர்ந்து வாழ்வது பிரச்சனையே. ஒருவரது நற்பண்புகளைப் பார்த்துப் பிறர் திருந்தலாம். ஒருவரது கெட்ட குணங்கள் மற்றவரைத் தொற்றிக் கொள்ளலாம். தீய வழிகளில் செல்வதற்கும் ஏதுவுண்டு. ஒருபால் ஈர்ப்புக்கும் வழியுண்டு. ஆகவே ஜாக்கிரதையாய்த் தமது சாட்சியான வாழ்வை காத்துக் கொள்வது மிக அவசியம்.

ஏழை, பணக்கார மாணவர்கள் ஒரே விடுதியில் சேர்ந்து வாழும்போது, ஏழை மாணவர்கள், பணக்கார மாணவர்களது வாழ்வைக் கண்டு, தாமும் அவர்களைப் போல உண்ணவும், உடுத்தவும், செலவழிக்கவும் ஆசைப்பட்டு, தமது பெற்றோரது வறுமையறிந்தும், சுயநலம் கொண்டு பொய் சொல்லிப் பணம் வாங்குவதும், சில நேரங்களில் பிறர் பொருளை, பணத்தைத் திருடி வாழ்வதும் விடுதிகளில் நடப்பதுண்டு. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. விரலுக்கேற்ற வீக்கமே உயர்ந்தது, பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேரல்லவா!பாழாகிப் போவதுண்டு. அதனால், எதற்காக விடுதியில் சேர்ந்தோம், சேர்க்கப்பட்டோம் என்பதை எப்போதும் மனதிலிருத்த வேண்டும்.

சக மாணவரிடையே போட்டி, பொறாமை, புறங்கூறுதல், தனித்தனி குழுக்களாய்ப் பிரிந்து மோதிக் கொள்ளுதல், நீயா, நானா பார்க்கலாம் எனப் பகையை வளர்த்தல் போன்ற பிரச்சினைகளும் விடுதிவாழ் மாணாக்கர் சந்திப்பதே.
இப்படி பிரச்சினைகளைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

பிரச்சினைகள் பல விடுதி வாழ்வில் இருப்பினும், கர்த்தருக்கு நமது வாழ்வில் முதலிடம் கொடுத்து, கர்த்தர் விரும்புவதுபோல, தன்னைப் போலப் பிறனையும் நேசிக்கிற மாணவர்கள், கர்த்தருக்கென்று அநேகரை ஆதாயப்படுத்த, விடுதிவாழ் வாழ்க்கை ஒரு களமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

பிறரிடம் காணப்படும் வேண்டாத குணங்களை வெறுத்து, நற்குணங்களை விரும்பிப் பின்பற்றி வாழ்ந்தால், நம் வாழ்வு சிறக்கும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். பல்வேறு பழக்கவழக்கமுள்ள சக மாணவர்களோடும் பழகி, சகித்து, அனுசரித்து, இசைந்து வாழும் விடுதி வாழ்வின் மூலம் பெற்ற அனுபவக் கல்வி, காலமெல்லாம் நமக்குக் கைகொடுக்கும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

-KTM

எனது பெயர் நாகராஜன். நான் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வடசேரி என்ற ஊரில் ஒரு இந்து பக்தி வைராக்கியமான குடும்பத்தில் பிறந்தேன். நானும் எனது தகப்பனாரும் பூஜாரியாக இருந்தோம். எனது அப்பா வடசேரி சந்தையில் வாழைக்காய் வியாபாரம் செய்து கொண்டு வந்தார். இதனால் நானும் எனது குடும்பமும் செல்வச் செழிப்பாக வாழ்ந்து வந்தோம். என் அப்பாவுடன் இணைந்து தொழில் செய்த இரு நபர்கள் எனது அப்பாவை ஏமாற்றிவிட்டு பணத்தை சுருட்டிக் கொண்டு போய்விட்டார்கள். இதனால் அப்பா வினுடைய தொழில் அடிப்பட்டது. ஆனாலும் சோர்ந்து போகாமல் 3 முறை தொழில் ஆரம்பித்தார். ஆனால் தோல்வியையே சந்தித்து, கடன் மேல் கடன் வாங்கினார். இதனால் எங்களுடைய வாழ்க்கையில் தோல்வி, நஷ்டம், ஏமாற்றம், கடன் இருந்தது. இச்சமயத்தில் நான் கிறிஸ்தவர்களுக்கு விரோதியாக இருந்தேன். அவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. ஏனென்றால் நான் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தில் இருந்தேன். இயேசு கிறிஸ்துவிடம் வாருங்கள், உங்களுக்குச் சமாதானம், நிம்மதி, விடுதலை கிடைக்கும் என்று கூறிய நண்பர்களிடம் சீறினேன். ஆனாலும் நானும் எனது அப்பாவும், எங்கள் தெய்வங்களுக்கு பூஜை செய்வதை விடவில்லை. ஆனாலும் எங்கள் குடும்பத்தில் எந்த முன்னேற்றம் இல்லை. பூஜை செய்தால் எனது குடும்பத்தில் நல்லது நடக்கும் என்று எதிர்பார்த்திருந்த எங்களுக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது. முடிவாகத் தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்து விட்டேன். அந்நேரத்தில் எனது நண்பர்களான திரு. சுதன், திரு. ஜெகன் ஆகிய கிறிஸ்தவ நண்பர்கள் என்னைக் கிறிஸ்தவக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி வருந்தி அழைத்தார்கள். எத்தனையோ தெய்வங்களுக்குப் பூஜை செய்தாகிவிட்டது, ஆனால் எந்த முன்னேற்றமும் இல்லை. இந்த இயேசு எனக்கு என்ன செய்யப் போகிறார் என்ற கேள்வியோடு அந்த கிறிஸ்தவக் கூடுகையில் கலந்து கொண்டேன். தேவனுடைய ஊழியர் செய்தி கொடுக்கின்ற வேளையில் எனக்கு ஒரு சத்தம் உனக்காக நான் மரித்தேன். இது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

என்னுடைய பாவங்கள் எனக்கு முன்பாக நின்றது. எனது பாவங்களை நான் அறிக்கையிட்ட போது, எனது மனபாரம் நீங்கி இலகுவடைந்ததை உணர்ந்தேன். ஒரு தேவ சமாதானம் என் இருதயத்தில் வந்து. ஆளுகை செய்தது. முன்பு எனக்கு இருந்த பயம், பாரம், நிம்மதியின்மை எல்லாம் மறைந்தது. எனக்குள் ஒரு இனம் புரியாத சந்தோஷம், சமாதானம் இயேசு தந்தார். நான் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதால் எனது வீட்டில் எனக்கு எதிர்ப்புக் கிளம்பியது. ஆனாலும் நான் சோர்ந்து போகாமல் இருக்க தேவன் பெலன் கொடுத்தார். நான் பெற்ற இந்த இரட்சிப்பின் சந்தோஷத்தை அநேக மக்களுக்குச் சாட்சியாக அறிவித்தேன், எனது குடும்பத்தினரையும், கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினேன். தற்போது என்னுடைய அப்பாவும், சகோதரரும் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**ஊழிய அழைப்பு:**

நாகர்கோவிலில் உள்ள திரு. ஐசக் அண்ணன் அவர்கள் மூலம் FMPB பற்றிய அறிமுகம் எனக்குக் கிடைத்தது. திரு. ஐசக் அண்ணனோடு இணைந்து FMPB முன்னேற்றப் பணிகளில் தேவனுடைய பணியை செய்து வந்தேன். 2000-ஆம் ஆண்டு நாகர் கோவிலில் நடைபெற்ற கிதியோனியர் முகாமில் கலந்து கொண்டு, பின் அதே வருடம் கோவையில் நடைபெற்ற மாநில முகாமில் கலந்து கொண்டேன். அங்கு திரு. ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணன் அவர்களின் செய்தி மற்றும் திரு. நவநீதர் அண்ணனுடைய ஒளி, ஒலி காட்சி மூலம் ஊழிய அழைப்பைப் பெற்றேன். 2001-ஆம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழு நேர ஊழியக்காரனாக இணைந்தேன். மேலும் தலைமை செயலகத்தில் தேவனுடைய பணியைச் செய்தேன். 2002-ஆம் ஆண்டு ஊழியப் பயிற்சிக்காக கச்சுவா அனுப்பப்பட்டேன். 2003-ஆம் ஆண்டு குஜராத்தில் உள்ள கவாண்ட் பணித்தளத்தில் டுங்கிராபீல் மக்கள் மத்தியில் தேவனுடைய பணியைச் செய்தேன். ஜார்கண்ட் மாநிலத்தில் மால்தோ மக்கள் மத்தியில் ஊழியம் செய்து கொண்டு வந்த திலகவதியை 2004 ஆம் ஆண்டு திருமணம் செய்தேன். பின்பு குடும்பமாக போடோலி, தாகோத், கேர்வாடா (இராஜஸ்தான்) விஜய் நகர், கவாண்ட் சிறுவர் விடுதி, கடோத், பாடோலி ஆகிய பணித்தளங்களில் பல்வேறு இனமக்களின் மத்தியில் தேவபணியை செய்ய தேவன் கிருபை செய்தார். 2014ஆம் ஆண்டு முதல் மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பெயிண்ட் பணித்தளத்திலும், முக்காடா பணித்தளத்திலும் தற்போது இகத்புரி என்ற பணித்தளத்தில் காத்கரி மக்கள் மத்தியில் தேவனுடைய பணியை செய்து கொண்டு வருகிறோம். எங்களுடையப் பிள்ளைகள் கிரேஸ்லின் 12-ம் வகுப்பிலும், கிளாட்சன் பால் 7-ம் வகுப்பிலும் டோனாவூர் சந்தோஷ வித்யாலயாவில் படிக்கிறார்கள். தொடர்ந்து எங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

முடிந்து போக இருந்த என்னுடைய வாழ்க்கையை மறுபடியும் வாழத் தேவன் கிருபை செய்தார். இம்மட்டும் எங்களுக்கு உதவின எபினேசர் இனியும் உதவி செய்ய வல்லவராகவே இருக்கிறார். அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் தேவனுடையப் பணிக்கு அநேக காலியிடங்கள் இருக்கின்றன. ஜெபித்தல், கொடுத்தல், கூடுகையில் பங்கு பெறுதல் ஆகியவற்றோடு நின்று விடாமல் ஒரு அடி முன்னால் தேவனுக்காக எடுத்து வையுங்கள். அழைத்த தேவன் உண்மையுள்ளவர். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

– சகோ. நாகராஜன், இகத்புரி பணித்தளம், மஹாராஷ்டிரா



# அழைப்பின் குரல் கேட்டேன்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்

# இளைஞர் பிரிவின் 50 ஆண்டு கால தொடரோட்டம்



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஓர் இளைஞர் இயக்கம். (சுவிசேஷத்தால்) இந்திய தேசத்தைச் சந்திக்கவேண்டுமென்று துடிப்பான இளைஞர்கள் இணைந்து செயல்படும் செயல்வீரர் கூட்டம். 1973ஆம் ஆண்டு இப்படிப்பட்ட தரிசனம் கொண்ட இளைய தலைமுறையினரைக் கண்டுபிடித்து ஊழியத்தில் ஈடுபடச் செய்ய இளைஞர் துறை ஆரம்பிக்கப்பட்டது. முயல் தீவு என்ற இடத்தில் நடைபெற்ற இளைஞர் பாளையம் என்ற முகாமில் பல நூறு இளைஞர்கள் பங்கு பெற்றனர். அதில் 40பேர் மிஷனெரிகளாகச் செல்ல முன்வந்தனர். இந்த முகாமிற்குப் பின், பின்தொடர் பணியாற்றும் பொறுப்பையும், தொடர்ந்து இளைஞர்களை வழி நடத்தும் பொறுப்பையும் இயக்கம் சகோ. கிங்ஸ்லி அருணோதயக்குமாருக்குக் கொடுத்தது. 1979ஆம் ஆண்டு இளைஞர் துறை திருச்சியை மையமாக வைத்து செயல்பட்டுவந்தது. 1980இல் சகோ. கிருபாகரனும் இளைஞர் துறையில் பணியாற்ற இணைந்து கொண்டார். 1982ஆம் ஆண்டு முதல் இளைஞர்துறை பொறுப்பை சகோ. ஸ்டான்லி பிரின்ஸ் எடுத்தார்கள். அவர்களுக்கு உதவியாக சகோ. வசந்த் ஜோசப் இணைந்தார். 1983ஆம் ஆண்டு சகோ. இ. ராஜன், சகோதரிகள்: ரூபெல்லா, குளோரி ஆகியோர் இணைந்தார்கள். 1984ஆம் ஆண்டு சகோ. இம்மானுவேல் ரஞ்சித்சிங் இணைந்தார். தமிழகமெங்கும் வாலிபர் கூடுகைகள் நடத்தப்பட்டு, வாலிப ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. கடிதம் வழியாகவும், நேரடி சந்திப்பு மூலமும் பின்தொடர் பணி செய்யப்பட்டு, நூற்றுக்கும் அதிகமான இளைஞர்கள் இயக்கத்தில் மிஷனெரிகளாக இணைந்தனர்.

1990 முதல் சகோ. அசோக் வேதநாயகம் இளைஞர்துறைக்குப் பொறுப்பேற்றார். அத்துடன் நவோதயா குழுவையும் நடத்தி வந்தார். சகோதரர்கள்: அசோக் வேதநாயகம், இராம்பர்ட் ரத்தினையா, ராஜன் மற்றும் இம்மானுவேல் ரஞ்சித்சிங் ஆகியோர் குடும்பங்களாகப் பணியாற்றினார்கள். நவோதயா குழுவில் சகோ. முகேஷ், சகோ. ஜாஷ்வா மற்றும் சகோதரி. விஜி பணியாற்றினார்கள். 1996இல் தமிழ்நாட்டை இரண்டாகப் பிரித்து வட தமிழ்நாட்டிற்குச் சென்னையை மையமாக வைத்து சகோ, இ. ராஜன் மற்றும் கிறிஸ்டியும், தென் தமிழகத்திற்கு திருச்சியை மையமாக வைத்து இம்மானுவேல் ரஞ்சித்சிங் & வசந்தியும் பொறுப்பேற்று வழி நடத்தினார்கள். 2002லிருந்து சகோ. எபினேசர் பீட்டர் வட தமிழகத்தை பொறுப்பேற்றார். அதன்பின் நவோதயா குழுவிற்கும் பொறுப்பேற்றார். சகோ. எபினேசர் பீட்டர் மேற்படிப்பிற்குச் சென்றப்பின் அப்பொறுப்பை சகோ. சார்லஸ் & ரெபேக்கா ஏற்று நடத்தி வந்தனர். தற்போது கௌரவ செயலர் திரு. ஜாண் லாங்வே பொறுப்பேற்று நடத்தி வருகிறார். சில காலம் வட மேற்கு தமிழக இளைஞர் பணியை சகோ. ஜேம்ஸ் துரைபாண்டியனும், தென் தமிழக பணியை சகோ. பாஸ்கரும் செய்து வந்தார்கள். 2008இல் திரு. இம்மானுவேல் குடும்பம் இளைஞர் துறைக்கு பொறுப்பாக இருந்து வழி நடத்தினர். அப்பொறுப்பைத் திரு. ஏசுவடியான் & நிருபாவிடம் ஒப்படைக்க அவர்கள் இருவரும் 2016 வரை இளைஞர் துறையை நடத்தினர். 2017 லிருந்து 2022 மார்ச் வரை செல்வின் & மெர்சி தம்பதியர் இத்துறையை நடத்தினர். 2022 ஏப்ரல் முதல் திரு. டேனியல் அருள்மணி குடும்பம் இத்துறையை பொறுப்பேற்றுள்ளனர்.

2023ல் இளைஞர் பிரிவில் பொன்விழாவை காணவிருக்கிறோம் என்பது இயக்கத்தின் தனிச் சிறப்பாகும். பொன்விழா ஆண்டின் வாலிபர் கொண்டாட்டம் இளைஞர் பாளையமாக பொங்கல் விடுமுறையில் நாசரேத்தில் வைத்து 14-01-2023 துவங்கி 16-01-2023 வரை நடைபெறும். தொடரோட்டம் தொடரவும். சுவிசேஷம் பாரதமெங்கும் பரவவும், ஊழியர்கள் அலை அலையாய் எழும்ப இயக்கம் எதிர்நோக்குகிறது. எங்களுடைய பாரமும், உங்களுடைய பாரமும் அதுவாக மாறட்டும். வாலிபர்கள் திரளாக வாருங்கள். தேவனின் திட்டத்தில் உங்களை இணைத்திடுங்கள்! வாழ்வின் முழுமையும் அவர் கரத்தில் கொடுத்து, அவர் பணி செய்திடுங்கள்.

## தொடரோட்டம் தொடரட்டும்...





# புதிய வானம் புதிய பூமி அவசியம் ஏன்?

புதிய வானம்,புதிய பூமி ஏன் அவசியம். நாம் இப்பொழுது வாழ்கின்ற இந்த பூமியை ஆண்டவர் சரிபடுத்தினால் போதாதா என்று நாம் ஒருவேளை நினைக்கலாம். நாம் பயன்படுத்தும் ஒரு பொருள் சற்று பழுதாகிவிட்டால் அதை சரியாக்க முயற்சிக்கலாம். ஆனால் அது முழுவதும் பழுதாகி பயன்படுத்த முடியாவிட்டால் அதைத் தூக்கி எறிந்துவிட்டு புதிய ஒன்றை வாங்குவதே நன்றாக இருக்கும். இதைப் போன்றுதான் நம் தேவனும் செயல்படுகிறார். இந்த பூமியானது அதுதான் படைக்கப்பட்ட போது இருந்த அழகிய தன்மையை இழந்து விட்டது. எங்கு பார்த்தாலும், பாவம் நிறைந்திருக்கிறது. அதாவது நம்மால் கிரகிக்க முடியாத அளவுக்கு அக்கிரமம் இங்கு நடந்து வருகிறது. எங்கு பார்த்தாலும் இருளின் அதி காரம் நிறைந்திருக்கிறது.

திருச்சபையின் நிலைமையும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆண்டவருடைய சாட்சிகளாய் இருக்க வேண்டியவர்கள். அவரை விட்டு தூரமாகச் சென்று விட்டனர். அதுமட்டுமல்ல இந்த பூமியும் தனது ஆதி படைப்பின் நிலைமையிலிருந்து மிகவும் மாறுபட்ட ஒன்றாக ஆகிவிட்டது. முன்நாட்களில் இல்லாத அளவு தட்பவெட்பநிலையில் மாற்றங்களை நாம் உணரமுடிகிறதல்லவா? மழை அதிகம் பெய்யாத பகுதிகளில் இந்நாட்களில் கனமழை பெய்வதையும், மழை தேவையான இடங்களில் வறட்சி நிலவுவதையும் நாம் உணர்கிறோமே. ஐரோப்பிய நாடுகளில் வரலாறு காணாத வறட்சி என்று செய்தி ஊடகங்களில் பார்க்கின்றோம். இவையெல்லாம் இந்த பூமி எந்த அளவுக்கு சீர் குலைந்துவிட்டது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

நீதி நியாயம் இவை முழுமையாக எடுப்பட்டுப் போய்விட்டது போன்று தென்படுகிறது. ஏழை எளியவர்கள் கோடீஸ்வரர்களால் எந்த அளவுக்கு ஒடுக்கப்படுகிறார்கள் என்பது நாம் அறிந்த ஒன்று. முன்பு நாம் கேட்டிராத எவ்வளவோ காரியங்கள் இன்று ஒவ்வொரு நாளும் அரங்கேறிக்கொண்டு இருக்கின்றன. இவையெல்லாம் ஆண்டவரின் வருகை மிகவும் அருகில் வந்து விட்டது என்பதை உணர்த்துகிறது. அதே நேரம் நாம் வாழும் இப்பூமி தனக்குள்ளே ஒரு மீட்புக்காக ஏங்குகிறது என்பதையும் நமக்கு காட்டுகிறது (ரோம 8:22) படித்து பாருங்கள். இவைகளை நன்றாக மனதில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவை நமக்குக் கற்றுத்தருவது என்ன?

நாம் வாழும் இப்பூமியும், நாம் பார்க்கும் வானமும் முழுமையாக அழிக்கப்படவேண்டிய நிலையில் உள்ளன என்பது புரிகிறதல்லவா? அப்படி பழைய பூமியும், வானமும் ஆண்டவரால் அழிக்கப்படும் என்றும், புதிய வானத்தையும், பூமியையும் தேவன் படைப்பார் எனவும் வேதம் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. இது ஆண்டவருடைய திட்டம் என்பதை நன்றாய் புரிந்து கொள்ள வேண்டும். புதிய வானமும், புதிய பூமியும் ஆண்டவரால் கட்டாயம் படைக்கப்பட வேண்டிய அவசியத்தை நம்மால் உணர முடிகிறதல்லவா?

- Rev. David Ponding

# ஆந்திர பணித்தள விஜய அனுபவம்

கடந்த தமிழ் மாநில முகாமில் வட இந்திய பணித்தள மிஷனெரிகளின் பணித்தள செய்திகளைக் கண்டு கேட்ட வாலிபர்களை கடந்த அக்டோபர் மாதம் ஆந்திர மாநிலம் கொணவரம் என்ற பகுதிக்கு அழைத்துச் சென்றோம். Rev. தியாகராஜன் அண்ணன் குடும்பம் எங்களை அன்போடு வரவேற்று அவர்கள் ஊழியம் செய்து வருகிறன்ற கோயா மற்றும் கொண்டாரெட்டி மக்கள் ஆராதிக்கும் திருச்சபைகள், அதனோடு இந்த மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு எங்களை அழைத்துச் சென்றனர்.





100 ஆண்டு வரலாறு காணாத வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட கிராமங்கள், வெள்ளப்பாதிப்பிற்கு பிறகு சுமார் 72 நாட்களுக்கு பின்தான் எங்களுடைய வீட்டிற்கு நாங்கள் வந்திருக்கிறோம் என நமது மிஷனெரி எங்களுடன் பகிர்ந்து கொண்டது எங்களுக்குத் தாக்கத்தை உண்டாக்கியது.

கோயா மக்களுடன் இணைந்து பூசக்குடம் என்ற இடத்தில் அக் 2ந் தேதி ஞாயிறு ஆராதனையில் ஆண்டவரை ஆராதித்தோம். வெள்ளப்பெருக்கு பாதிப்பில் இருந்து தற்போதுதான் மீண்டு வந்த நமது விசுவாசிகளுக்கு நாங்கள் சென்றது அவர்களுக்கு சந்தோஷத்தையும் ஊக்கத்தையும் தந்தது. ஆராதனை வேளையில் நமது விசுவாசிகள் பகிர்ந்து கொண்ட சாட்சிகள் கர்த்தர் அவர்கள் வாழ்வில் செய்த அற்புதங்களைக் கேட்டு ஆண்டவரை மகிமைப்படுத்தினோம்.

அன்று இரவு டேக்லோத்திபூ என்ற மலைக் கிராமத்தில் கொண்டாரெட்டி விசுவாசிகளுடன் மூங்கிலால் அமைந்துள்ள ஆராதனை கூடத்தில் இரவு கூடுகையில் கலந்து கொண்டோம். அன்று இரவு அங்கேயே இரவில் தங்கினது பட்டணத்தில் வசித்து வருகிற எங்களுக்கு இது ஓர் மறக்க முடியாத புது அனுபவம்.

03-ந் தேதி கபிலால் குந்தி என்ற மலைப்பகுதியில் வசிக்கிற கொண்டாரெட்டி மக்களை சந்திக்க மலையில் சுமார் 1 1/2 மணி நேரம் நமது மிஷனெரி அண்ணனுடன் நடந்து சென்றது சவாலான நேரமாக இருந்தது. 60வது நிரம்பிய மிஷனெரி தியாகராஜன் அண்ணன் மிக உற்சாகமாய் நடந்து சென்றது இந்த வயதிலும் அவர்களுக்கு இருந்த ஆத்ம பாரத்தை நினைத்து ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினோம்.

கொண்டாரெட்டி பிள்ளைகள் படிப்பு வசதி கிடைக்காமல் மீன் பிடிப்பது, இளம் வளதில் திருமனம் செய்யாமல் இணைந்து வாழ்வது, மூடநம்பிக்கையில் இருந்து வெளிவரமுடியாத கட்டப்பட்ட வாழ்வு அடிப்படை வசதிகள் இல்லாத சூழ்நிலைகள் எங்களுக்கு பெரிய சவாலாகவும் தொடர்ந்த இம்மக்களுக்காகவும் இங்கு ஊழியம் செய்கின்ற மிஷனெரிகளுக்காக ஜெபிக்கவும், ஜெபக்குழுவில் நாங்கள் பெற்றுக்கொண்ட அனுபவத்தை பகிர்ந்து கொள்வதோடு கர்த்தருக்குச் சித்தமானால் நாங்களும் சுவிசேஷம் அறிவிக்கப்படாத பகுதிக்கு மிஷனெரிகளாக வருகிறோம் என்ற அர்ப்பணிப்புடன் எங்கள் பகுதிக்குக் கடந்து வந்தோம்.



- Shekinah Church Youth

# ஜெபிக்க... கடந்தமாத ஜெப கரிசனைகள்



**1.எகிறும் வட்டிகளும்.. அதிகரிக்கும் கடன் பாரங்களும்**

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கை. பண வீக்கத்தை கட்டுப்படுத்த, வங்கிகளுக்கு அளிக்கப்படும் ரெப்பொ ரேட் எனப்படும் வட்டி விகிதத்தை மீண்டும் அதிகரித்துள்ளது ரிசர்வ் வங்கி. இதன் விளைவாக வங்கி கடன் வட்டி விகிதம், வாகனக் கடன், வீட்டுக் கடன், கல்விக் கடன் உள்ளிட்ட பல்வேறு விதமான கடன் வட்டி அதிகரிப்பதால் பாதிக்கப்படும் மக்களுக்காக ஜெபிப்போம்.

**2.கால்பந்து போட்டியில் தோல்வி**

ரசிகர்கள் ஆத்திரத்தால் ஏற்பட்ட வன்முறையில் 174 பேர் உயிரிழப்பு! விளையாட்டுப் போட்டி ஒன்று மாபெரும் கலவரமாக மாறியுள்ளது, இந்தோனேசியாவில் அதிர்ச்சியையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது போன்ற கலவரங்கள் தடுக்கப்படவும் விளையாட்டை விளையாட்டாக மட்டுமே கண்டு களிக்கவும், விளையாட்டு மைதானங்களில் போதிய பாதுகாப்பு வழிமுறைகள் கடைபிடிக்கப்படவும் வன்முறைகள் முறையாகக் கையாளப்படவும் ஜெபிப்போம்.

**3.டெல்லி 6வயது சிறுவனை பலி கொடுத்த இருவர் கைது**

சிறுவனை பறிகொடுத்த குடும்பத்தினரின் ஆறுதலுக்காக, நமது தேசத்தில் மேலும் இது போன்ற பலி கொடுக்கும் சம்பவங்கள் நிகழாதிருக்க, நமக்காக பலியாகி உயிர்த்த இயேசு கிறிஸ்துவை மக்கள் அறிந்துகொள்ள ஜெபிப்போம்.

**4.மது போதையில் தொல்லை செய்ததால் அப்படி செய்து விட்டேன்**

போலீஸில் மனைவி வாக்குமூலம். குடித்து தொல்லை செய்த கணவனை கொலை செய்த மனைவி. இதுபோன்ற குற்றங்கள் இனி நடைபெறாமல் இருக்க, கொலை எண்ணங்களை விதைக்கும் சாத்தானின் தந்திரங்கள் அழிக்கப்பட, சமூக வலைத்தளங்களிலுள்ள கொலை, தற்கொலை செய்யத் தூண்டும், உதவும் பதிவுகள் முற்றிலுமாக அழிக்கப்பட ஜெபிப்போம்.

**5.மகனை திட்டியதால் நேர்ந்த சோகம்..**

தந்தையும் தற்கொலை. தங்கள் பெற்றோர்கள் கூறும் ஆலோசனைகளைக் கேட்க முடியாமல் தற்கொலைக்கு நேராக செல்லும் சந்ததி மாற, பிள்ளைகளின் மனம் பக்குவம் அடையவும், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படியும் எண்ணம் வளரவும், தற்கொலை எண்ணம் நம் தேசத்தை விட்டு ஒழிய, அப்படிபட்ட எண்ணத்தை கொண்டு வரும் சாத்தானின் கிரியைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.

**6.66 குழந்தைகளை பலிகொண்ட மெய்டன்**

இருமல் மருந்து இந்தியாவில் விற்பனை இல்லை. மருந்தைப் பயன்படுத்தியதால், 66 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர், ஏராளமான குழந்தைகளுக்கு சிறுநீரகம் தொடர்பான சிக்கல்கள் எழுந்துள்ளது, குழந்தைகள் பாதுகாப்பிற்காக, இந்த மருந்து மற்ற நாடுகளிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து விரைவில் தடை செய்ய ஜெபிப்போம்.

**7.உற்சாகத்தில், தலை, கால் புரியாமல் சுற்றுலா பஸ் ஓட்டிய போது ஆட்டம் போட்ட டிரைவர்**

பள்ளி மாணவர்கள் பலிக்குக் காரணமானவர். பேருந்து ஓட்டுநர்கள் கவனத்துடன் பேருந்துகளை இயக்கவும் இப்படிப்பட்ட துணிகரமான காரியங்களில் ஈடுபடாமல் இருக்கவும், பேருந்துகளில் பயணம் செய்யும் மாணவர்கள், சிறியோர், வாலிபர்கள், பெரியவர் அனைவருக்கும் நல்ல பாதுகாப்பை தேவன் தாமே கட்டளையிடவும், சாலை விபத்துகள் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

**8.பெண் வயிற்றில் 5 ஆண்டாக கத்தரிக்கோல்**

விசாரணை நடத்த கேரள அரசு உத்தரவு. மருத்துவ சேவை புரியும் ஒவ்வொரு மருத்துவர்களும் தங்கள் சேவையில் கவனத்துடன் இருக்க, மருத்துவர்களுக்கு தேவையான விசேஷித்த ஞானத்தையும், பாதுகாப்பையும் தேவன் கட்டளையிட, தவறான மருத்துவ சிகிச்சையினாலோ, மருத்துவர்களின் கவனமின்மையினாலோ யாரும் பாதிக்கபடாமல் இருக்க ஜெபிப்போம்.

**9.கேரளா எதை நோக்கி செல்கிறது**

கேரளா எதை நோக்கி செல்கிறது? 2 பெண்கள் நரபலி சம்பவத்தில் உயர் நீதிமன்றம் அதிர்ச்சி. மனிதர்களை மனிதர்களே கொடூரமான முறையில் கொலை செய்யும் இப்படிபட்ட மூடநம்பிக்கைகள் நம் தேசத்தை விட்டு ஒழிய, இதுபோன்ற மனித பகுத்தறிவை மீறிய சம்பவங்கள் நடைபெறுவது தடுக்கப்பட, அரசு தக்க நடவடிக்கை எடுக்கவும், இப்படிபட்ட செயலில் ஈடுபடுவோர் மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

**10.தாயை கொலை செய்து செல்போனில் பாட்டுகேட்ட 9 ஆம் வகுப்பு மானவன்**

ப்ரீ பயர் – கஞ்சா அடிமையால் விபரீதம். ப்ரீ பயர் கேம்களில் எதிரியை வீழ்த்திய சந்தோஷத்தைப் போல் பெற்ற தாயை கொலை செய்த குற்ற உணர்வில்லாமல் நடந்துக்கொண்ட 14 வயது சிறுவன், சிறுவர்களின் இரட்சிப்புக்காக, பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கஞ்சா போன்ற போதைப்பழக்க அடிமையிலிருந்து முற்றிலுமாக வெளிவர, தடைசெய்யப்பட்ட ஆன்லைன் கேம்களை பதிவிறக்கம் செய்யாதபடி சட்டங்கள் கொண்டுவரப்பட, ஆப்கள் முற்றிலுமாக அழிக்கப்பட ஜெபிப்போம்.

- Mr. Allen



# வேதாகமப் பயிற்சி குழு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணித்தளங்களில் உள்ள நமது இளம் விசுவாசிகளை தேவ வார்த்தையில் கட்டியெழுப்புவதற்காகப் பணித்தளம் எங்கிலும் நாம் வேதாகமப் பயிற்சி குழுவை ஏற்படுத்தி வருகிறோம். இதன் விளைவாக நமது இளம் விசுவாசிகள் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெறுவதோடு, எச்சூழ்நிலையிலும் விசுவாசத்தை விட்டு பின்வாங்காது, நமது ஊழியங்களில் பல விதங்களில் அவர்கள் தீவிர ஈடுபாடு காட்டி வருகின்றனர். இதற்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

தாமாகவே குழுவாக உட்கார்ந்து வேதத்தைக் கற்கும் குழுக்களை வேதாகமப்பயிற்சி குழு என அழைக்கிறோம். இதில் விசுவாசிகள் குழுவாக தமக்கு வசதி யான சமயங்களில் கூடி வருகின்றனர். பின் ஏதாவது ஒரு வேதபாட முறையின் படி குழுவாக வேதத்தைக் கற்கின்றனர். வாரத்தில் ஒரு முறையோ அல்லது தினமோ கூடி கற்கின்றனர்.

நமது இயக்கத்தில் இந்தக் குழுக்கள் ஆரம்பிப்பது பற்றி 2017 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டது. பின் படிப்படியாக இது ஊக்கம் பெற்று 2020-லிருந்து விசுவாசிகளை ஆவிக்குரிய வாழ்வில் வளர்ப்பதற்கு இம்முறை ஒரு முக்கியக் கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்குப் பண செலவு கிடையாது.

**நமது இயக்கத்தின் எதிர்பார்ப்பு:**

எல்லாஆராதனைக்குழுக்களிலும் இக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு தினமும் கிரமமாக நடை பெற வேண்டும். எல்லா ஆராதனைக் குழுக்களிலும் 4 விதமான (Bible Study Group – Men, Bible Study Group – Women, Bible Study Group – Youth, Bible Study Group - Others) பரிணாமத்தில் இக்குழுக்கள் நடத்தப்பட வேண்டும். இக்குழுவை தலைமையேற்று நடத்துபவர்கள் விசுவாசிகளாக இருக்க வேண்டும்.

**பயன்கள்**

★ நல்லத் தரமான விசுவாசிகள் உருவாகுகிறார்கள்.

★ விசுவாசிகள் வேதத்தில் வேறூன்றப் படுகிறார்கள்.

★ எதிர்ப்புகளை எதிர்க்கொள்ள விசுவாசிகள் கற்றுக் கொள்கிறார்கள்.

★ விசுவாசிகள் வேத ஆசிரியர்களாக மாறுகிறார்கள்.

★ நம் இயக்கம் எதிர்பார்க்கிறபடி இக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு கிரமமாக நடைபெற்றால் நம் விசுவாசிகள் சிறந்தத் தரமான தேவ ஊழியக்காரராக உருவெடுப்பார்கள்.

**வேதாகமப் பயிற்சிக் குழுவைப் பற்றியதான சாட்சி: (சகோ. கமலேஷ் எக்கா – சத்தீஸ்கட்)**

பஹாட்பாரா என்ற சபையில், வாலிபனாக அநேக ஊழியங்களை எடுத்துச் செல்வதில் கர்த்தர் அவரை பயன்படுத்துகிறார். ஆனால் அவரின் வருத்தம் எனக்கு வேதம் படிக்கப் பிடிக்கின்றது. ஆனால் விளக்கம் தெரியவில்லை. மேலும் வசனம் மறந்து விடுகிறது. பிரசங்கம் செய்ய மிகவும் ஆவல். வாய்ப்புக் கிடைத்தாலும் நான் பேச முடியவில்லை என்றெல்லாம் கூறிய இவர், வேதப்பாடம் நான் கற்றே ஆகவேண்டும் என்ற முயற்சியில் குடும்பத்தோடு கலந்து கொண்டு வேதத்தை கற்றுக்கொள்ளுகிறார். இன்னும் உற்சாகத்தோடு மனைவி, அப்பா, அம்மா ,தம்பி மற்றும் தங்கை என அனைவரையும் இக்குழுவில் தவறாமல் ஈடுபடுத்தி வருகிறார். இதன் மூலம் குடும்பத்தையும், சபையையும் நன்றாக, சமாதானமாக எடுத்துச்செல்ல, வசனமே எனக்குப் பிரதானம் என்று சொல்லி மற்றவர்களையும் வேதப்பயிற்சி குழுவில் இணைய உற்சாகப்படுத்துகிறார்.

**துதிக்க:**

★ 2020-2021-ல் 6244 வேதாகமப் பயிற்சி குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்காகத் தேவனைத் துதிப்போம்.

★ 2021-2022-ல் 8050 வேதாகமப் பயிற்சி குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

★ 2022-2023-ல் 6026 (April to Sep) வேதாகமப் பயிற்சி குழுக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:**

☞ எல்லா ஆராதனைக்குழுக்களிலும் இக்குழு ஆரம்பிக்கப்பட்டு தினமும் கிரமமாக நடை பெற ஜெபிப்போம்.

☞ எல்லா ஆராதனைக் குழுக்களிலும் 4 விதமான (Bible Study Group – Men, Bible Study Group – Women, Bible Study Group – Youth, Bible Study Group - Others) இக்குழுக்கள் நடத்தப்பட ஜெபிப்போம்.

☞ விசுவாசிகள் இக்குழுவை தலைமை யேற்று நடத்த ஜெபிப்போம்..

☞ வேதம் வாசிக்கும் பழக்கம் நம் விசுவாசிகளிடம் காணப்பட ஜெபிப்போம்.

☞ இதன் மூலம் தரமான விசுவாசிகள் உருவாக ஜெபிப்போம்.

☞ பல குழுக்கள் கிரமமாகக் கூடி வராதவர்களாக காணப்படும் நிலை மாறவும், அநேகர் கூடி வரவும் ஜெபிப்போம்.

☞ எதிர்ப்புகள் ஏற்படும் போது, விசுவாசிகள் தைரியத்தோடு எதிர்கொள்ள ஜெபிப்போம்.

Rev. R.தாமஸ்
பணித்தள அலுவலகம், நாக்பூர்

நம் தேசத்தில் சுமார் 33 மில்லியன் தேவர்களை கடவுளாக தொழுது கொண்டு வருகின்றனர். 365 நாட்களிலும் நம் தேசத்தில் ஏதாவது ஒரு பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. நம் தேச மக்களும் அதனை சலிக்காமல் எல்லா நாட்களிலும் கொண்டாடுகின்றனர். நம் தேச மக்கள் பக்தி மிகுந்தவர்கள், இந்த பக்தியினை அவர்கள் சரியான வழியில் பயன்படுத்தினால் நிச்சயம் நம் தேசம் இரட்சிக்கப்படுமே. இந்தப் பணியினை செய்ய நீயும் நானும் தான் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஏனெனில் பக்தியுள்ளவனை கர்த்தர் தமக்கென்று தெரிந்துக் கொண்டார் என்று நாம் வேதத்தில் படிக்கிறோம் இல்லையா?

சரி! இப்படி ஒரு பக்கம் இருக்க, இன்னும் பலர் கடவுளே இல்லை என்று நாத்திகர்களாய் இருப்பவர்களையும் நாம் காண்கிறோம். ஒரு முறை யாரோ ஒருவர் கூறின கதை எனக்கு ஞாபகம் வருகிறது. இரு நண்பர்கள் ஒரே கல்லூரியில் ஆராய்ச்சிக்காகச் சேர்ந்திருந்தனர். ஒருவர் கடவுள் இல்லை என்று சொல்லும் நாத்திகர். மற்றொருவர் நம் தேவனை அறிந்த கிறிஸ்தவர். கிறிஸ்தவர் தன் நண்பனுக்கு தேவன் ஒருவர் இருக்கிறார் என்று புரிய வைக்க முடிவு செய்தார். அதன் படி தன் நாத்திக நண்பரை ஓர் அறைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள அதன் அமைப்பைக் காட்டி அதன் வடிவமைப்பாளரைக் குறித்து அவரிடம் விவரமாய் கூறினார். பின்னர் இருவரும் தங்கள் அறைகளுக்கு சென்றுவிட்டனர். அடுத்த நாளில் மறுபடியும் அதே அறைக்கு நண்பனை அழைத்துச் சென்றார். அந்த கிறிஸ்தவர் இந்த முறை அந்த அறையில் சூரியனும் அதனின் 9 கோள்களையும் மாதிரியாக செய்து வைத்திருந்தார். அதனை கண்ட நாத்திகர் எவ்வளவு அழகாக இதை செய்திருக்கிறார்கள். அதுவும் ஒரே இரவில்! என்று வியந்து கூறினார். பின்னர் தன் கருத்தை கூறினார் அந்த கிறிஸ்தவ நண்பர். இதே போலத் தான் நம் உலகமும் இதனை அழகாக வடிவமைத்தவர் தேவன், உன் கூற்றுப்படி பார்த்தால் அந்த 9 கோள்களின் மாதிரியும் தானாக உருவாகியிருக்க வேண்டும். ஆனால் அது நேற்று இரவு என்னால் செய்யப்பட்டவை. இதன் மூலம் இந்த உலகத்தையும் ஒருவர் படைத்திருக்கிறார் என்றும், அது தானாக உருவாகவில்லை என்றும் இப்போது புரிகிறதா? என்று கேட்டார். நாத்தீக நண்பருக்கு பெரிய இருண்ட காட்டில் ஓர் வெளிச்சம் உதித்துப் போல் இருந்தது. இந்த கதை உங்களுக்கும் நம் தேவனைப்பற்றி மற்றவர்களுக்கு கூற உபயோகமாயிருக்கும் என்று நம்புகிறேன். சரி நாம் விசுவாசமில்லா மக்களுக்காக ஜெபம் பண்ண ஆரம்பிப்போம்.

**ஜெபக்குறிப்புகள்:**

1. "லவ் ஜிகாத்" என்ற பெயரில் பெண்களை ஏமாற்றி காதலில் சிக்கவைத்து பின்னர் மதம் மாற்ற கட்டாயப்படுத்தும் சமூகத்தினருக்காய் நாம் மன்றாடுவோம். பெண்கள் இவர்கள் கண்ணியில் சிக்காத வண்ணம் தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.
2. மூடநம்பிக்கையின் உச்சக்கட்டம் 2 பெண்களை நரபலிக்கொடுத்து அவர்களின் மாம்சத்தை சமைத்து சாப்பிட்டால் செல்வம் பெருகும் என்று பூஜாரி கூறியதற்கேற்ப செய்து பரிகாரம் நிறைவேற்றிய கேரள தம்பதி, இவ்வாறு குருட்டாட்டம் பிடித்திருக்கும் நம் தேச மக்களுக்காய் கதறுவோம்.
3. நம் தேசத்தில் உள்ள அனைத்து நாத்திகர்களையும் நம் தேவன் இரட்சிக்க மன்றாடுவோம்.
4. இரகசிய கிறிஸ்தவர்கள் என்று, தங்கள் குடும்பத்தாருக்கு தெரிந்துவிடுமோ என்று பயத்தோடிருக்கும் அனைத்து விசுவாசிகளுக்கும் தேவன் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொடுக்க ஜெபிப்போம்.
5. Mormons, சாத்தான் சபை, Jehova witness போன்றவற்றில் நம் தேச மக்கள் சிக்கிவிடாமல் நம் தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.
6. இழப்புகள், துன்பங்கள், வறுமை, உறவினர்களால் கிறிஸ்துவின் அன்பை ருசிபார்த்தும் பின்மாற்றத்தில் இருக்கும் விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.
7. "பெயர் கிறிஸ்தவர்கள்" என்று அறியாமலேயே அவ்வாறு பெயரில் மட்டுமே கிறிஸ்துவைக் காட்டி தங்கள் நடைமுறை வாழ்க்கையில் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் விசுவாசிகளுக்காய் மன்றாடுவோம்.
8. முக்கோடி தெய்வங்களை தொழுதுகொள்ளும் நம் மக்கள் ஒரே உண்மையான தெய்வமாகிய நம் தேவனை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.
9. பாவ பரிகாரங்கள் என்று ஊர் ஊராக செல்லும் பக்தர்கள் நம் தேவனுக்குப் பக்தர்களாய் மாற ஜெபிப்போம்.
10. விசுவாசிகள் எப்பொழுதும் தங்கள் வாழ்க்கையில் தேவனின் ஒளியைக் காட்டி விசுவாசமில்லா மக்களுக்குச் சாட்சிகளாய் வாழ மன்றாடுவோம்.



# விசுவாசமில்லா மக்கள்

Mrs. Jeba Tyson



# கொண்டாரெட்டி இன மக்கள்

கொண்டாரெட்டி இனமக்கள் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கோதாவரி நதி பாயும் இடமான கோதாவரி மாவட்டத்தில் கிழக்கில் உள்ள மலைகள் மேல் வசிக்கிறார்கள். கொண்டாரெட்டி என்றால் “மலைரெட்டி” என்று அர்த்தம். அந்த மக்களும் தங்கள் பெயர்களுக்கு பின்னால் ரெட்டி என்று போடுவார்கள். ஆனால் இவர்கள் ஆதிவாசி இன மக்கள் கூட்டங்களைச் சேர்ந்தவர்கள். மிகவும் பின்தங்கிய பழங்குடியினர். படிப்பு மற்றும் நாகரீகங்களில் மிகவும் பின்தங்கி இருக்கின்றனர். பூஜாரிகளை நம்பி வாழ்கின்றனர். இவர்களின் முக்கியம ான பண்டிகை “மாமேடு” பண்டிகையாகும். மாம்பழம் பழுத்த உடனே அதை பண்டிகையில் படைத்த பின்புதான் உபயோகிப்பார்கள்.

ஒரு பெண் பிடித்திருந்தால் அந்தப் பெண்ணை அழைத்து வந்து ஊர் பெரியவர்களின் ஒப்புதல் பெற்று, அவர்களோடு சேர்ந்து வாழ்வார்கள். கொஞ்சநாட்கள் கழித்து அந்தப் பெண்ணை திருமணம் செய்துக் கொள்வார்கள். சில நேரங்களில் அப்படி சேர்ந்து வாழும்போது பிடிக்கவில்லை என்றால் திருமணமாகாமலேயே பிரிந்துவிடுவர். பெண்கள்தான் அதிகம் கல்வியறிவுப் பெற்றவர்கள். ஆண்கள் படிப்புக் குறைவாகவே உள்ளது. மூங்கில்களை காடுகளில் இருந்து கொண்டு வந்து அதில் தட்டி மற்றும் கூடை செய்து விற்பார்கள், தேன் எடுத்து விற்பார்கள். இந்த ஜனங்கள் மிகவும் ஏழ்மையில் உள்ளவர்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியம் ஐந்து கிராமங்களில் இந்த மக்கள் மத்தியில் நடைபெற்று வருகிறது. கோயா மக்கள் மத்தியில் 10 வருடங்களுக்கு முன்பாக உருவாக்கப்பட்டது. கோதாவரியின் சமவெளிப் பகுதிகளில் கோயா மக்கள் உள்ளனர். இவர்கள் மத்தி யில் அதிகமாக ஊழியம் நடைபெற்று வருகிறது. இன்னும் அநேக கொண்டா மக்கள் மலை ஓரங்களில் வாழும் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை. இவர்கள் மத்தியில் கிதியோன் என்பவருக்கு (பழைய பெயர் அஞ்சன் ரெட்டி) நுரையீரல் தொற்று ஏற்பட்டு மரிக்கும் தருவாயில் இருக்கும் போது, ஆலயத்திற்குக் கொண்டு வந்து ஜெபித்த போது சுகத்தை பெற்றார். அதனால் அவர்கள் பெற்றோர்கள் இவரை ஊழியத் திற்கு அர்ப்பணித்துள்ளனர். இவரும், இவருடைய மனைவியும் சேர்ந்து நமது ஊழியத்திற்கு உதவி செய்து வருகிறார்கள். இரண்டு நதிகள் சேருமிட மாகிய கோதாவரி மற்றும் சபரிப் பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலங்களில் வெள்ளம் வந்து அநேக மக்கள் கஷ்டப்படுவர். இந்த வருடம் இம்மக்கள் மத்தியில் ஐந்து முறை வெள்ளம் வந்து வீடுகள் மூழ்கியது. இவ்வாறு வாழும் மக்களுக்காக பாரத்தோடு ஜெபிப்போம்.

ஜெபக்குறிப்புகள்:

1. பூஜாரிகளை நம்பி வாழும் இம்மக்கள் மெய் தேவனாக இயேசுவை கண்டுக் கொள்ள ஜெபிப்போம்.
2. குடிப்பழக்கத்திற்கு அடிமையாக உள்ள இம்மக்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.
3. படிப்பு நாகரீகங்களில் பின்தங்கியிருக்கும் இம்மக்கள் படிப்பறிவு பெற்று தங்கள் வாழ்வில் முன்னேற ஜெபிப்போம்.
4. ஏழ்மையில் இருக்கும் இம்மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற ஜெபிப்போம்.
5. இம்மக்களில் அநேகர் மலேரியா, டெங்கு, இரத்த சோகை நோயினால் பாதிக்கப்படுகின்றனர். மருத்துவ வசதி யில்லாமல் அநேகர் மரித்து போகின்றனர். இம்மக்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் கிடைக்க ஜெபிப்போம்.
6. மழைக்காலங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் இம்மக்களுக்கு அரசாங்கம் போதுமான உதவிகள் செய்யவும், வெள்ளப் பாதிப்பு வராதபடி பாதுகாப்பு செய்யப்படவும் ஜெபிப்போம்.
7. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மக்கள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ ஜெபிப்போம்.
8. அநேக மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைகாட்டவும், தேவன் இம்மக்கள் மத்தியில் திறந்த வாசலை தரவும் ஜெபிப்போம்.
9. வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட இழப்புகள், பாதிப்புகள் மத்தியிலும் அதே பகுதியில் பணி செய்யும் நமது மிஷனெரி தியாகராஜன் அண்ணன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
10. நமது இயக்கத்தின் மூலமாக இம்மக்கள் மத்தி யில் பணி செய்யும் ஊழியர்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

- Rev. Thiyagarajan

# ஆன்லைன் மோசடி




ஆன்லைன் லோன் App மோசடியில் சிக்கி ஐ.டி ஊழியர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. வாங்கிய கடனை செலுத்திய பின்னரும் கடனை கட்டச் சொல்லி மிரட்டல் விடுத்ததால் விபரீத முடிவு எடுத்துள்ளார். இதுபோன்று அநேக செய்திகள் கடந்த நாட்களில் கேட்டு மிகுந்த துயரப்பட செய்கிறது. நீங்கள் எங்குமே அலைய வேண்டிய அவசியமில்லை. ஒரே ஒரு ஆப்பை உங்கள் மொபைலில் பதிவிறக்கம் செய்து, மிகக் குறைந்த ஆவணங்களை மட்டுமே சமர்ப்பித்து, உடனடியாக பணத்தைப் பெற முடியும். இந்த ஆப்கள் மூலம் ஆயிரத்தில் தொடங்கி லட்சங்கள் வரை கடன்களைப் பெறலாம். பலவகைக் கடன் திட்டங்களை இந்த ஆப்கள் நமக்குத் தருகின்றன. அதிலொன்றைத் தேர்வு செய்து எளிதாகக் கடன் பெற முடியும் என்ற விளம்பரத்தினால் சிக்கப்பட்டு அநேகர் வாழ்க்கையைத் தொலைத்துள்ளனர். ஆய்வின்படி 1100 லோன் செயலிகளில் 600 சட்டத்துக்குப் புறம்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன. லோன் ஆப் மோசடிகளால் இந்தியா முழுவதும் மாதத்திற்கு சுமாராக 45 ஆயிரம் நபர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என மத்திய குற்றப்பிரிவு – சைபர் கிரைம் போலீசார் தெரிவித்துள்ளனர்.

இதில் பல திடுக்கிடும் உண்மைகள் வெளியாகியுள்ளன. முதலில் கால் சென்டர் பணிக்கு ஆட்களை தேர்வு செய்வது போல இண்டர்வியூ நடத்தி லோன் ஆப் மோசடி கும்பல் ஊழியர்களை பணிக்குச் சேர்த்துள்ளனர். குறிப்பாக லோன் பெற்ற வாடிக்கையாளர்களை ஆபாசமாக திட்டவும், புகைப்படங்களை மார்பிங் செய்யவும், தனியாக இண்டர்வியூ வைத்து ஆட்களை தேர்வு செய்து வந்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர்கள் லோன் ஆப்பை உருவாக்குவதற்காகவே தனியாக ஒரு சாப்ட்வேர் டெவலப்பர் டீமையும், புகைப்படங்களை மார்ஃபிங் செய்வதற்காக ஒரு போட்டோ ஷாப் டீமையும் வைத்து மோசடியை அரங்கேற்றி வந்துள்ளனர். நாளொன்றுக்கு சுமாராக ஒரு கோடி ரூபாய் வரை பொது மக்களிடமிருந்து பணம் பறித்து வந்ததும், அதனை உடனடியாக பல்வேறு வங்கி கணக்குகளுக்கு மாற்றியும் பின்பு அதிலிருந்து ஒரு பகுதியை புதிதாக வரும் வாடிக்கையாளர்களுக்கு லோன் கொடுத்து, இதனை ஒரு சுழற்சியாகவே செய்து வந்துள்ளனர். லோன் ஆப் மோசடி கும்பலானது 50 நபர்களைக் கொண்டு குழுவை வைத்து உத்திரப்பிரதேசம், பீகார், ஹரியானாவை சேர்ந்த 4 நபர்கள் மோசடியை நடத்தி வந்தனர் எனவும், இவர்கள் அனைவரும் வீட்டில் இருந்தபடியே மோசடி செயல்களில் ஈடுபட்டு வரும் Work From Home மோசடி கும்பல்கள் எனவும் தெரியவந்தது. லோன் ஆப் மோசடியில் ஈடுபட்டு வரும் இவர்கள் யாரையுமே ஒருவரை ஒருவர் தெரியாது எனவும், ஆன்லைனில் மட்டுமே தொடர்பு கொண்டு இந்தியாவின் பல பகுதிகளில் லோன் ஆப்பில் பணம் கொடுத்து பின் மோசடியில் ஈடுபட்டு வருவதும் தெரியவந்தது. இவர்கள் Cash coin, Cash world, New Credit, Gold Money, Best rupee, Rupee Handy, Sam Cash, Home Cash, Dutta Rupee, Royal Cash, Open Credit, Table Cash, Buddy Cash, Home Case, Loan Bro-M, Handy Loan, West Cash, Small Credit போன்ற 50க்கும் மேற்பட்ட லோன் ஆப்கள் மூலம் பொது மக்களுக்கு பணம் கொடுத்து மோசடியில் ஈடுபட்டு வந்ததும் தெரிய வந்தது.(நன்றி நியூஸ் 18 தமிழ்)


மேலும் இந்த மோசடி கும்பல் வாட்ஸ் அப் கால் மூலமாக மட்டுமே தொடர்பு கொண்டு மோசடியில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக, பணம் செலுத்திய பின்னும் லோன் ஆப் மோசடிக்காரர்கள் கடன் பெற்றவர்களின் செல்போன்களை ஹேக் செய்து போனில் இருக்கும் புகைப்படங்களை எடுத்து மார்ஃபிங் செய்து, ஆபாச புகைப்படங்களாக சித்தரித்து மொபைலில் உள்ள நண்பர்கள், உறவினர்களுக்கு அனுப்பியுள்ளனர். இதனால் பெரும் மன உலைச்சலில் இருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளித்துள்ளனர்.

இதிலிருந்து தப்பிக்க ஒரேயொரு வழிதான் இருக்கிறது. ஆன்லைன் லோன் ஆப்கள் மூலம் கடன் பெறாமல் இருப்பதுதான் அந்த வழி. இந்த லோன் ஆப்கள் இந்தியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளில்தான் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. பல இளைஞர்கள் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளில் பணத்தையும், நேரத்தையும் இழந்துகொண்டிருக்கிறார்கள். அதேபோல இந்த ஆன்லைன் லோன் ஆப்கள் மூலம் பணத்தைப் பெற்றுத் திருப்பிச் செலுத்த முடியாமல்போனால், பணம் மட்டுமல்லாமல் அதோடு சேர்த்து மானத்தையும் இழக்க நேரிடும் என்பதால் இதில் கடன் பெற வேண்டாம். "நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்" (உபா 28:12) என்ற ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து இதுபோன்றப் பிரச்சினைகளில் சிக்காமல் இருப்போம்.

Mrs. Hepsi Baskaran

**ஜெபக்குறிப்புகள்:**

1. ஆன்லைன் லோன் ஆப் அனைத்து செயலிகளையும் விரைவில் தடைசெய்ய ஜெபிப்போம்.
2. இதனால் பாதிக்கப்பட்டோர் விரைவில் அவர்களாகவே முன்வந்து புகார் அளிக்க, இந்த மாஃபியா கும்பல்கள் கண்டுபிடிக்கப்பட ஜெபிப்போம்.
3. கடன் வாங்கி செலுத்தமுடியாமல் விரக்தியிலும், நம்பிக்கை அற்று இருப்போருக்கும் தேவன் தாமே இதிலிருந்து மீள கிருபையளிக்க, தற்கொலை எண்ணங்களைக் கொண்டு வரும் பிசாசின் கிரியைகள் அழிக்கப்பட ஜெபிப்போம்.
4. தமிழ்நாட்டில் ஆன்லைன் லோன் ஆப் மூலம் மட்டும் சுமார் ரூ.175 கோடி மோசடி, எஸ். எம். எஸ்ஸில் வரும் எந்த லிங்கையும் விளையாட்டாக கூட பதிவிறக்கம் செய்யாமல் மக்கள் ஞானத்துடன் செயல்பட ஜெபிப்போம்.
5. மக்களுக்கு விழிப்புணர்வு பதிவுகள் கொடுக்கப்பட, மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுத்து மக்களை பாதுகாக்க ஜெபிப்போம்.



# சர்வதேச ஆண்கள் தினம்




பெண்கள் தீபங்களாக ஜொலிப்பதற்கு காரணம் எண்ணெயும் திரியுமான ஆண்கள். ஒவ்வொரு குடும்பத்தையும் தனது விடா முயற்சியாலும், கடின உழைப்பாலும் தூக்கி நிறுத்துபவர்கள் ஆண்கள். சமுதாயத்தின் காப்பாளனாகவும், சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை தன் உழைப்பாலும் பூர்த்தி செய்பவர்கள்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ரஷியா, இங்கிலாந்து உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் 45 வயதிற்குட்பட்ட ஆண்களின் மரணத்திற்கு தற்கொலையே முக்கிய காரணம் என உலக சுகாதார அமைப்பின் தரவுகள் கூறுகின்றன. மனநலம் மற்றும் உளவியல் ரீதியாக ஏற்படும் தாக்கங்களே இதற்கு காரணமாக அமைகிறது. தந்தைகளாக, சகோதரர்களாக, கணவர்களாக, சக ஊழியர்களாக சமுதாயத்தில் சாதனை படைத்து வரும் ஆண்களின் பங்களிப்பு மற்றும் சாதனையை போற்றும் வகையில் சர்வதேச ஆண்கள் தினம் ஆண்டுதோறும் நவம்பர் 19 ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. இது ஆண்களின் கலாச்சார அரசியல் மற்றும் சமூக பொருளாதார சாதனைகளை அங்கீகரித்து கொண்டாடுவதற்கான நாள். ஆண்கள் வலிமையானவர்கள், பாதிப்பில்லாதவர்கள் என அவர்களின் வெளித்தோற்றம் கொண்டு அளவிடப்படாமல் உணர்வுப்பூர்வமான அவர்களின் தேவைகள் மதிக்கப்பட வேண்டும்.

## ஜெபக்குறிப்புகள்:

☞ பெண்குழந்தைகள்போலவே ஆண்குழந்தைகளுக்கும் எதிராக நடக்கும் பாலியல் தொந்தரவுகளை பெற்றோர் கணிவுடன் அணுகி தீர்வு காண ஜெபிப்போம்.

☞ஆண்கள் குழந்தைகளாக வளரும் போதே அவர்களுக்குள் பொறுப்பை திணித்து நெருக்கடி உண்டாக்கும் நிலை ஏற்படுகிறது. இப்படி மகத்தான பல தியாகங்களை குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் செய்து வரும் ஆண்களின் பெருமையை சமுதாயம் அங்கீகரிக்க ஜெபிப்போம்.

☞ பெண்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருக்கு பாதுகாவலனாக இருக்கும் ஆண்கள் மனம் மற்றும் உடல் நலத்தை பேணுவதில் கவனம் செலுத்த ஜெபிப்போம்.

☞ சொந்த பிரச்சனைகளை கூட வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கும் ஆண்கள் போற்றப்பட வேண்டியவர்கள் . இவர்கள் அலுவலகம், குடும்பம் என பல்வேறு இடங்களில் ஏற்படும் பிரச்சனைகளால் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு, தற்கொலைக்கு முயலும் நிலை உள்ளது. இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஜெபிப்போம்.

☞ திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கையில் எதிர்பார்ப்புகள் ஆண்கள் மீது திணிக்கப்படுவது குறைக்கப்பட ஜெபிப்போம்.

☞ இந்த சமூகம் ஆணின் உணர்ச்சிகளை புரிந்து கொண்டு அதை ஏற்றுக் கொள்ளவும், அவர்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்த இடம் கொடுக்கப்படவும் ஜெபிப்போம்.

☞ ஆண்களுக்கெதிரான ஒடுக்குமுறை மன அழுத்தம் போன்ற பல்வேறு பாதிப்புகளிலிருந்து விடுப்பட்டு, பாலின சமத்துவம் பேணும் வகையில் அவர்கள் மதிக்கப்பட ஜெபிப்போம்.

☞மனைவிகளை இழந்து தவிக்கும் கணவன்மார்களுக்காக பிள்ளைகளை சரியான விதத்தில் வளர்க்க வேண்டிய ஒத்தாசைகளைத் தேவன் தர ஜெபிப்போம்.

☞ ஊழிய ஸ்தாபனங்களுக்கு தலைவர்களாக இருப்போர் அனைத்து திருச்சபையின் போதகர்கள் மற்றும் தலைவர்களை தேவன் தாமே வழிநடத்த ஜெபிப்போம்.

☞ தவறான பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டுள்ளோர் மற்றும் பொறுமையில்லாமல் செயல்படும் ஆண்கள் மனந்திரும்பி குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதில் கவனமாக செயல்பட ஜெபிப்போம்.

☞ ஒவ்வொரு ஆணும் தங்கள் முழுமையான திறனை வெளிப்படுத்த முறையான வாய்ப்புகள் அளிக்கப்பட ஜெபிப்போம்.

☞ சமூக சேவைகள் சமூக அணுகுமுறைகள் சட்டம் ஆகிய துறைகளில் ஆண்களுக்கு எதிராக உள்ள பாகுபாடுகள் நீங்க ஜெபிப்போம்.

☞ அனைத்து துறைகளிலும் கடினமான செயல்பாடுகளில் தங்களை ஈடுப்படுத்தி கொண்டு பல இடர்களுக்கு மத்தியில் முழுமையான அர்ப்பணிப்புடன் பணி புரிந்து வரும் ஆணினத்தின் சாதனைகளை அடையாளம் கண்டு அதற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அங்கீகாரத்தை சமுதாயத்தில் பெற ஜெபிப்போம்.

☞ இந்திய ஆண்கள் எதிர்கொள்ளும் சட்டபூர்வ பயங்கரவாதத்தையும், ஆண்களைப் பொருளாதார ரீதியிலும், மன ரீதியாகவும், கொடுமைப்படுத்தும் போக்கையும் பல ஆணெதிர்சட்டங்களால் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் மாற ஜெபிப்போம்.

☞ வரதட்சணை கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் போன்ற சட்டங்கள் தவறாக பயன்படுத்தப்பட்டு கைது செய்யப்படும் கணவன்களுக்கு நீதி கிடைக்க ஜெபிப்போம்.

☞ சிலரால் ஒட்டுமொத்த ஆண்கள் சமுதாயத்தையே குற்றவாளி போன்றுஎண்ணாமல் அவர்கள் உணர்வுகளை மதித்து அவர்களை போற்றுவோம்.

Mrs. Steffi

# இந்திய திருச்சபை வரலாறு



## கிழக்கு இந்திய வாணிகக் குழு

கி.பி 19ம் நூற்றாண்டின் இறுதியில் தான் பிரித்தானியாவின் செல்வாக்கு இந்தியாவில் பெருகி, வங்காளம், சென்னை, மும்பை ஆகிய பெரிய நகரத்தை தன் ஆளுகைக்கு கொண்டு வந்தது. இக்காலத்தில் ஜெர்மானிய நாட்டில் பக்தி இயக்கத்தின் பயனாக இங்கிலாந்திலும், ஆன்மீக எழுப்புதல் உண்டாகி நற்செய்தி பணியாற்ற அயல்நாடுகளுக்கு, திருப்பணியாளரை அனுப்புவதில் ஆர்வம் காட்டின. ஏற்கனவே இங்கிலாந்தில் கிறிஸ்தவ அறிவு அபிவிருத்தி சங்கம் (SPCK) நற்செய்தி இயக்கம் இயங்கி வந்தாலும் அவ்வளவு தீவிரம் காட்டவில்லை. ஆனால் இப்பொழுது தீவிர எழுச்சியுடன் பல மிஷனெரிச் சங்கம் உண்டாயின. 1795இல் லண்டன் மிஷனெரிச் சங்கம் (LMS) 1799-இல் ஆங்கில சபை மிஷனெரிச் சங்கம் (CMS). 1819-இல் மெதடிஸ்து மிஷனெரி சங்கம். 1810-ஆம் ஆண்டு அமெரிக்கன் மிஷன் ஆகிய மிஷனெரி சங்கங்கள் உண்டாகி நற்செய்தி அறிவித்து புரோட்டாஸ்தாந்து சபைகள் பல பிரிவினங்களாக இந்தியாவிற்குள் பரவியது. அத்துடன் நற்செய்தி பணிக்கு, கிழக்கிந்திய வணிக குழு விதித்திருந்த கட்டுப்பாட்டையும் தளர்த்தியது.

## வில்லியம் கேரி:

இக்காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் வில்லியம் கேரி பாப்திஸ்து சபையினரை ஒன்று சேர்த்து திருப்பணி ஊழியரை மற்ற நாடுகளுக்கு அனுப்பி நற்செய்தி பணியை அறிவிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறி, அக்கூட்டத்தில் ஏசாயா 54:2,3-ம் வசனத்தின்படி கர்த்தரிடமிருந்து பெரிய காரியத்தை எதிர்பாருங்கள் (Expect great things from God) கர்த்தருக்காக பெரிய காரியத்தை செய்யுங்கள் (Attempt great things for God) என்ற அறைகூவல் விடுத்தார். அத்துடன் தானே பாப்திஸ்து மிஷனெரி சங்கத்தின் முதல் மிஷனெரியாக இந்தியா வந்து, கல்கத்தாவில் சுந்தர்பன் காடுகளில் தனது அருட்பணியை தொடங்கினார். ஊழியத்தின் தொடக்கக்காலத்திலேயே இங்குள்ள சூழல் காரணமாக அவரது மனைவி பிள்ளைகள் இந்திய மண்ணில் அருட்பணியின் வித்தாக மரித்தார்கள். ஆனாலும் மனம் தளராமல் வில்லியம்கேரி வங்காளம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்று சுற்றுப்புறமுள்ள மக்களுக்கு அருளுரை ஆற்ற ஆரம்பித்தார். அத்துடன் பள்ளிக் கூடத்தையும் தொடங்கினார். வங்காள புலவர் ஒருவரை வைத்து புதிய ஏற்பாட்டையும், பழைய ஏற்பாட்டின் பெரும் பாகத்தையும் வங்காளத்தில் மொழிபெயர்த்தார். மேலும் செராம்பூர் மிஷன் பணிக்கு ஒரு பெரிய வீட்டையும் அதைச் சுற்றியிருந்த கோட்டைக்குட்பட்ட நிலப்பகுதி முழுவதையும் வாங்கி, கேரி கனவு கண்ட புதிய சமுதாயம் உருவாகிட அவை அடித்தளமாய் அமைந்தது. கேரியுடன் யோசுவா மார்சுமன் பள்ளி ஆசிரியரும், வில்லியம் வார்டு தச்சு இயந்திரத்தை கையாண்டு பல மொழிகளில் வேதாகமம் அச்சிட்டு வெளிவரவும் உதவியாயிருந்தார். 1901ம் ஆண்டின் தொடக்கத்தில், புதிய ஏற்பாடு அச்சிட்டு வெளியானது. இந்நூலின் உரையாடல் பகுதியை கண்ணுற்ற அரசாங்கத்தினர், கேரியை கவர்னர் ஜெனரல் வெல்யெஸ்லி பிரபுவிடம் கொண்டு வந்து, அறிமுகமாக்கி, வில்லியம் கேரி பல்கலை கழகப் பேராசிரியராக நியமனம் பண்ணப்பட்டார். இதன் மூலம் கவர்னரின் தொடர்பு கிடைத்தபடியால் பிற்காலத்தில் 126 பள்ளி கூடங்களும், செராம்பூரில் 37 மாணவர்களுடன் ஒரு அறிவியல் கல்லூரியும் ஆரம்பிக்க அனுகூலமாக அமைந்தது. அத்துடன் 1818ம் ஆண்டு மார்சுமன்



சமாசார்தர்பன் என்ற வங்காள செய்தித்தாளையும் திங்கள் வெளியீடாக இந்தியாவின் நண்பன் என்ற ஆங்கில பத்திரிக்கையையும் நடத்தி அவைகள் மூலம் இந்திய சமூகத்தில் உள்ள குழந்தை பலி, உடன்கட்டை ஏறும் பழக்கம் ஆகியவற்றை எழுதி சமூக எழுச்சியடையச் செய்தார். அத்துடன் நின்றுவிடாமல் அன்றைய வங்காள கவர்னர் ஜெனரலுடன் சமூக மூடப்பழக்கத்தைக் குறித்து கலந்துரையாடி உடன் கட்டை ஏறுதல், குழந்தைபலி ஆகிய மூடப்பழக்கத்திற்கு எதிரான சட்டம் இயற்றி அவை முற்றிலும் நிறுத்தப்பட்டது. 1824ம் ஆண்டு வில்லியம் கேரி மரிக்கிற பொழுது திருமறை முழுவதும் 6 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. புதிய ஏற்பாடு 33 மொழிகளிலும் வெளியிடப்பட்டு இருந்தது. அத்துடன் ஜெபபுத்தகமும் வெளியிட்டு இருந்தது குறிப்பிடத்தக்கவையாகும்.

<u>19ம் நூற்றாண்டின் திருப்பணி:</u>

கி.பி. 19ம் நூற்றாண்டில் நற்செய்தி அருட்பணி இந்திய தேசமெங்கும் தீவிரமாக நடைபெற்றது. இக்காலத்தில் (1813) ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் சாசனத்தில் நற்செய்தி அருட்பணியாளர்களை தடைசெய்வதே கம்பெனியின் நோக்கமாக இருந்தது. இருந்த போதிலும் தடைகள் மத்தியிலும் திருட்பணியாளர்கள் இந்தியா வந்து ஊழியத்தை செய்தார்கள். 1810ஆம் ஆண்டு இந்தியாவின் தென் கோடியில் ஜெர்மானிய லுத்தரன் சபை மிஷனெரி ரிங்கல்தொபே கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகிய பகுதியில் இறைப்பணியாற்றி சபைகள் பல உருவாகக் காரணமாக அமைந்தார். ரிங்கல் தொபே கன்னியாகுமரி மாவட்டம் மைலாடி கிராமத்தில் வேதமாணிக்கம் என்ற வாலிபர் சிதம்பரம் வரை புனித பயணம் மேற் கொள்கையில், பரம தரிசனம் ஒன்றைக் கண்டு, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ரிங்கல் தொபே மூலம் ஞானஸ்நானம் பெற்றார். இதன்பின் மைலாடி கிராமம் ஒரு அருட்பணி மையமாக மாறி சபைகள் உருவானது. ரிங்கல்தொபே அந்நாட்களில் திருவாங்கூர் சமஸ்தானம் வரையில் இறைபணியாற்றி ஏராளமான சபைகள் உருவாக காரணமாக அமைந்தார். இவரது காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் நாடார் குல இன மக்கள் கூட்டம் கூட்டமாக இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்று சபைகளில் இணைந்தார்கள். தாம் நிறுவிய சபைகளுக்கு குருக்களையும் உபதேசிமார்களையும் நியமனம் செய்து வைத்தார். இதனால் 1813-ஆம் ஆண்டு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் புதுப்பிக்கப்பட்ட சாசனத்தில் இந்தியாவில் உள்ள கல்கத்தா, மும்பை சென்னை ஆகிய தலைநகரை ஒருங்கிணைந்த பகுதியில் இந்தியாவில் ஆங்கிலிக்கன் பேராயம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதற்கான ஊதியம் கம்பெனியின் வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டும் என்ற சாசனம் நிறைவேற்றப்பட்டது. இப்படியாக 19ம் நூற்றாண்டில் பல்வேறு பிரிவுள்ள சபைகள் இந்தியாவில் உருவானது.

தொடரும்...

**Rev.A.G** தனபால்ராஜ்
**ECI** நல்மேய்பர் ஆலயம், நங்கநல்லூர், சென்னை.





# புதிய வானம் புதிய பூமி

## தன்மை எப்படிப்பட்டதாய் இருக்கும்?

வெளிபடுத்தல் 21:1 ஆம் வசனத்திலிருந்து வரும் வேதப் பகுதிகளைப் படிப்பீர்களானால் கடவுள் படைக்கும் புதிய பூமி எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். அதோடு அப்பூமியில் அடையவிருக்கும் புதிய எருசலேம் நகரத்தைப்பற்றியும் நாம் தெரிந்து கொள்ளலாம். முதலாவது ஆண்டவர் படைக்கும் புதிய பூமியானது மிகவும் பரிசுத்தமான ஒன்றாக அமையும். பாவம் என்ற பேச்சிக்கு அங்கு இடமிராது. ஏனென்றால் முதலாவது தேவன் அந்த பூமியில் அல்லது அங்கு வாசமயிருக்கிறவர்களிடத்தில் தங்கியிருப்பார். பரிசுத்த தேவன் அங்கு வாசம் பண்ணுவதினால் அது பரிசுத்தமாயிருக்கும். இரண்டாவதாக ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள் மட்டும் அதில் பிரவேசிப்பார்கள். அப்படியானால் புதிய பூமி என்பது எந்த அளவுக்கு பரிசுத்தமான பகுதியாக இருக்கும் என்பதை புரிந்து கொள்ளலாம்.

புதிய பூமியில் உருவாக்கப்படும் புதிய எருசலேம் மிகவும் விசாலமான ஒன்று என்பதை வெளிப்படுத்தல் 21:16ஆம் வசனத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். இவ்வுலகில் மக்கள் நிம்மதியாக மூச்சுவிடக்கூட வழியில்லை. ஆனால் ஆண்டவர் படைக்கவிருக்கும் புதிய பூமியானது அப்படியிராது. மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட ஒன்றாக இருக்கும். மனநிறைவோடு நிம்மதியாக ஆண்டவருடைய பிள்ளைகள் வாழ்வார்கள். விசாலமானது மட்டுமல்ல, மிகவும் அழகான ஒன்று அது எந்த அளவு அலங்காரமான ஒன்று என்பதை அதே வெளி 21:10ஆம் வசனத்திலிருந்து தொடர்ச்சியாக வரும் பகுதியிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அடுத்தப்படியாக புதிய பூமியை இந்நாட்களில் நாம் காண்கின்ற அல்லது அனுபவிக்கின்ற பாடுகளோ, உபத்திரவங்களோ இராது இனிமேல் மரணமும் இல்லை என்று வேதம் கூறுகிறது. கண்ணீர் சிந்த வேண்டிய அவசியமற்ற ஒரு மகிழ்ச்சியான இடம் தான் அது. இந்த உலகில் நாம் எவ்வளவு கண்ணீர் சிந்தி கவலைப்படுகிறோம், கண்ணீரற்ற ஒரு புதிய உலகில் நாம் வாழுவோம் என்பது எத்தனை மகிழ்ச்சியான செய்தி.

அடுத்தப்படியாக இந்த புதிய பூமியில் அதாவது புதிய எருசலேமில் தேவாலயம் என்ற ஒன்று காணப்படாது என்று வெளிப்படுத்தல் 21:22ல் பார்க்கிறோம். ஏனென்றால் நாம் ஆராதிக்கும் நம் தேவனை நாம் முகமுகமாய் பார்ப்பதினால் அங்கு தேவாலயத்திற்கு அவசியம் இருக்காது என்று நான் நம்புகிறேன். புதிய பூமியில் அவர் நம்முடன் வாசம் பண்ணுவதில்லை. அவரே நமது ஆலயமாய் இருப்பார். மேலும் இந்த புதிய வானம், புதிய பூமியில் வெளிச்சம் கொடுக்க சந்திரனோ, சூரியனோ இருக்கப்போவதில்லை. தேவனுடைய மகிமையே அந்த நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்கும். ஒளிமயமான அந்த புதிய பூமியில் வாழ்வது எவ்வளவு அற்புதமான ஒன்றாக அமையும்.

கடைசியாக இராக்காலம் இல்லாத அந்த நகரம் பாதுகாப்பான ஒன்று. வெளி 21:25ல் படித்து பாருங்கள். அதன் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதேயில்லை என்று எழுதப்பட்டிருப்பதை கவனியுங்கள். இப்படிப்பட்ட தனித்தன்மைகள் இந்த புதிய வானம், புதிய பூமியில் அமைந்திருக்கின்றன.

- Rev. David Ponding

வாழ்வின் மிக முக்கியமான பருவம், இந்த டீன் ஏஜ் பருவம். விடுதலையோடு கூட சந்தோஷமாக வாழ வேண்டிய பருவம், எதையும் சாதிக்கத் துடிக்கும் பருவம். வாழ்வில் ஏற்படும் தடைக்கற்களைத் தாண்டி வெற்றியின் படிக்கட்டுகளாக மாற்றத் துடிக்கும் பருவம்.

தம்பி, தங்கச்சி இந்த டீன் ஏஜ் வாழ்வில் எது உனக்கு தடைக்கற்களாக உள்ளது? A Passion for the impossible – என்ற தலைப்பில் ஹட்சன் டெய்லர் என்ற மிஷனெரி ஓர் புத்தகம் எழுதியுள்ளார். அதில் சுவிசேஷத்தின் வாசல் அடைப்பட்டிருந்த காலத்தில் சீனா தேசம் சென்ற மிஷனெரிகள் பல தடைகளைத் தாண்டி சீனா தேசத்திற்குப் போக முயற்சித்தார்கள். தங்கள் வெள்ளை நிறத்தை மாற்ற பல வேஷங்களில் உள்ளே நுழைய முயற்சித்தனர். இவ்வாறு 10 முறை முயன்றும் எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்தது.

ஒரு நாள் சீன தேசத்தின் எல்லையில் நின்று தாங்கள் சீனா தேசத்திற்கு செல்லத் தடையாக நிற்கும் பாறைகளைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சோடு இப்படி ஜெபித்தார்களாம். "ஓ பாறையே! பாறையே!! நாங்கள் சீனா தேசத்திற்கு செல்லப் பாதை திறக்கமாட்டாயா?" என்று மாற்கு 11:23 ல் இயேசு கூறியபடி "இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று விசுவாசத்தோடு சொன்னால் அது சொன்னபடியே ஆகும்" என்பது போல் மிஷனெரிகளும் ஜெபித்தார்கள். சில வருடங்கள் கடந்தன. அவர்கள் ஜெபத்தைக் கேட்டு அந்த மிஷனெரிகள் சீனா தேசம் சென்றனர். லட்சக்கணக்கான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டார்களாம்.

அன்பான தம்பி, தங்கச்சி! இந்த நாட்களில் உனக்கு தடையாக இருப்பது என்ன? நீயே சிந்தித்துப் பார். சரியாக வேதத்தை வாசிக்க முடியாதபடி, ஜெபிக்க முடியாதபடி, படிக்க முடியாதபடி இருப்பதற்கு எது தடையாக உள்ளது. உன் வாழ்வின் முன்னேற்றத்தைத் தடை செய்யும்படி உன்னை முன்னேறிப் போகவிடாதபடி உனக்கு முன்பாக எழுந்து நிற்கும் பாறைதான் என்ன? CellPhone, whatsapp, youtube, twitter, online Game, Friends சற்று யோசித்துப் பார்.


சிறகடித்துப் பறக்க வேண்டிய நீ சிறகொடிந்த பறவை போல் முடங்கிக் கிடக்கிறாயோ? ஜீவவாசனை வீசி அநேகரை மகிழ்ச்சிக்குள்ளாக்க வேண்டிய நீ மரண வாசனை வீசி மற்றவருக்கு பாரமாக உள்ளேனே எனக் கலங்கிக் கொண்டிருக்கிறாயோ? உன் வாழ்வில் தேவன் அற்புதங்களைச் செய்ய ஆவலாய் உள்ளார்.

தடைகளைக் கண்டு துவண்டு விடாதே. தடைகளைத் தகர்த்து உன் முன் செல்லும் தேவன் உனக்கு உண்டு (மீகா 2:13) விசுவாசத்தோடு கீழ்க்காணும் வசனங்களை சொல்லிக் கொண்டே இரு.

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு (பிலி 4:13)

என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோவா 14:14)

நிச்சயமாக தேவன் உன் வாழ்வில் தடையாக நிற்கும் பாறைகளை நீக்கி வெற்றிப்பாதையில் உன்னை நடத்துவார்.




# TEENS PAGE

- Mrs. Vasanthi Emmanuel



# சகோ. செல்லப்பா ஞானசேகரன்

சகோ. சு. செல்லப்பா ஞானசேகரன் 1937 பெப்ரவரி 2 ஆம் தேதி கரூரில் பிறந்தார். இவருடைய பெற்றோர் திரு. சுவாமிதாஸ், திருமதி. இன்பம் இருவரும் ஆசிரியர்கள். இவரோடு உடன் பிறந்தவர்கள் 4 அண்ணன்மார்களும் ஒரு தம்பியுமாகும். நல்ல பக்தியுள்ள கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தாலும், ஆண்டவரைப் பற்றிக்கொள்ளாமல் கர்த்தருக்கேற்ற பக்தியையும், விசுவாசத்தையும் பற்றாமல் கிறிஸ்துவை விட்டு தூரம் சென்று விட்டார் சகோ. செல்லப்பா. அதற்குக் காரணம் அவருடைய தீய நண்பர்களின் ஐக்கியமே. அது அவரை உலகப் பிரகாரமான வாழ்க்கைக்கு நேராக இழுத்துச்சென்றது. அவருடைய பெற்றோர் ஆசிரியர்கள் ஆனபடியால் அவரையும் பள்ளிப்படிப்பிற்குப் பின் ஆசிரியர் பயிற்சிக்கு அனுப்பி, படிக்க வைத்து, ஆசிரியர் வேலையை வாங்கிக் கொடுத்தார்கள்.



இரட்சிப்பும் திருமண வாழ்வும்

ஆசிரியராக வேலை பார்த்து சம்பாதித்து வந்தபடியாலும், அண்ணன்மார் அனைவருக்கும் திருமணமாகி இருந்தபடியாலும் சகோ. செல்லப்பாவின் பெற்றோர் திருமண ஏற்பாடு செய்தனர். 1966ஆம்ஆண்டு செப்டம்பர் 16ஆம்தேதி முசிறியைச்சார்ந்ததிரு. மாணிக்கம், திருமதி. ருக்குமணி தம்பதியர்களின் மகள் சகோதரி. ஹெப்சிபா சாந்தகுமாரிக்கும் திரு. செல்லப்பாவிற்கும் திருமணம் நடந்தது. சகோதரி. ஹெப்சிபா சாந்தக்குமாரி தட்டச்சராக அரசாங்க அலுவலகத்தில் பணியாற்றி வந்தார். அவர்கள் குடும்பம் கிறிஸ்தவரல்லாத பின்னணியத்திலிருந்து கிறிஸ்தவர்களாக மாறியவர்கள். திருமதி. சாந்தக்குமாரி வெறும் பெயர் கிறிஸ்தவராகவே இருந்தார். ஆசிரியப்பணி செய்து வந்த சகோ. செல்லப்பா குடும்ப வாழ்வை கரூர் பட்டணத்திலேயே ஆரம்பித்து மிக சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அவர்கள் விரும்பிய மனநிம்மதியில்லாதிருந்தது. பெயர் கிறிஸ்தவர்களாகக் காலத்தைக் கழித்து வந்தனர். 1972ஆம் ஆண்டு ஜுன் 10ஆம் தேதி சினிமாவிற்குப் போக வீட்டைவிட்டுப் புறப்பட்ட சகோ. செல்லப்பா, கிறிஸ்தவ கன்வென்ஷன் நடைபெற்றுக் கொண்டிருந்த சி. எஸ். ஐ. பள்ளி வளாகத்தைக் கடந்து செல்லும்போது என்ன பேசுகிறார்கள் என கேட்கும்படி அங்கு சென்றார். அங்கே நின்று வேடிக்கைப்பார்த்த அவர், சற்று அருகே சென்று அமர்ந்து செய்தியைக் கேட்க ஆரம்பித்தார்.

ஆண்டவர் முன் குறித்த நாளாக இருந்தபடியால் அந்த நாள் சகோ. செல்லப்பாவின் வாழ்க்கையில் ஒரு மறக்க முடியாத நாளாக மாறியது. அந்தக் கூட்டத்தில் செய்தி கொடுத்துக் கொண்டிருந்தவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அன்றைய பொதுச்செயலர் சகோ. எமில் ஜெபசிங். அவரது செய்தி சகோ. செல்லப்பாவை அதிகம் கவரவே, கவனமாகக் கேட்க ஆரம்பித்தார். பரிசுத்த ஆவியானவர் அவர் ஒரு பாவி என்று உணர்த்தி ஆண்டவர் தரும் மன்னிப்பை அந்த நாளில் பெற்றுக் கொண்டார். வீட்டிற்கு மகிழ்ச்சியாக திரும்பிய சகோ. செல்லப்பா தன்னுடைய பழைய வாழ்வைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவர் எபே 2: 1-8 மூலம் ஞாபகப்படுத்தவே இனி இப்படிப்பட்ட அசுத்தமான வாழ்வு எனக்குத் தேவையில்லை என அழுது பரிசுத்த வாழ்விற்கு முற்றிலும் தன்னை அர்ப்பணித்தார்.

திருமதி. சாந்தக்குமாரி செல்லப்பா அவர்களும் பெயர் கிறிஸ்தவர்களாகவே வாழ்ந்து வந்தார்கள். திருமணத்திற்குப் பிறகு 1972ஆம் ஆண்டு செப்டம்பர்

மாதம் கரூரில் நடந்த நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் கிதியோனியர் முகாமில் பங்கு பெறும் வாய்ப்பு கிடைத்தது. சிறப்புச் செய்தியாளராக திரு. பி. சாமுவேல் அழைக்கப்பட்டிருந்தார். அவர் கொடுத்த சந்தியா செய்தியில் சகோதரி சாந்தா செல்லப்பா கிறிஸ்துவிற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். அன்றைக்கே என் வாழ்வின் முதலிடம், என்றைக்கும் கிறிஸ்துவே என தீர்மானமும் செய்தார்கள்.

ஊழியத்திற்கு அழைப்பு

கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தபடியால் நற்செய்தி சொல்லச்செல்லும் குழுவோடு சகோ. செல்லப்பாவும் செல்வது உண்டு. அதன் பின்பு சற்று வாஞ்சை ஏற்பட்டபடியால் நண்பர்களுடன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஊழியம் செய்து வந்தார். 1973ஆம் ஆண்டு முயல் தீவில் நடந்த இளைஞர் பாளையம் முகாமிற்குச் சென்ற சகோ. செல்லப்பாவோடு ஆண்டவர் இடைப்பட்டார். அங்கு நடந்த சந்தியாக் கூட்டத்தில் தேவன் 2 தீமோ 4: 9, 2: 15 ,1: 9 போன்ற வசனங்கள் வாயிலாக பேசவே தன்னை மிஷனெரிப் பணிக்கென ஒப்புக்கொடுத்தார். இந்த அழைப்பை நிச்சயப்படுத்திக்கொள்ள ஜெபித்து வேதம் வாசிக்கும் போது ஆண்டவர் 1 தெச. 5: 24, 1 தீமோ. 6: 12, 2 தீமோ 4: 5 போன்ற வசனங்களின் வழியாக நிச்சயப்படுத்தினார். சகோதரி சாந்தக்குமாரி 1973ஆம் ஆண்டு கரூரில் நடந்த நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் கிதியோனியர் முகாமின் போது ஊழியத்திற்கு அழைப்பைப் பெற்று தேவனுடைய சித்தம் தன்னுடைய வாழ்வில் நிறைவேற அர்ப்பணித்திருந்தார்கள். இவ்வாறு குடும்பமாக மிஷனெரிப் பணிக்கென அழைப்பைப் பெற்று தேவ வழி நடத்துதலுக்காகக் காத்திருந்தார்கள். 1975ஆம் ஆண்டு மார்ச் மாதம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் திரு. செல்லப்பா குடும்பம் இணைந்தது. உடனே அவர்களை வீரபாண்டிய பட்டிணத்திலுள்ள நிதிக்காவலர் அலுவலகத்தி லும், அதன் பின் குஜராத்தில் தோடியா இன மக்கள் மத்தியிலும் பணியாற்ற அனுப்பி வைக்கப்பட்டார்கள். 1976ஆம் ஆண்டு குஜராத்திலுள்ள தராம்பூர் பணித்தளத்திற்கு ஜுலை மாதம் வந்து சேர்ந்தார்கள். அங்கு மொழிப்பயிற்சி பெற்று, குஜராத் மக்கள் பேசும் மொழியைக் கற்றுக்கொண்டு பணியாற்றி வந்தார்கள். 1977ம் ஆண்டு, முதல் திருமுழுக்கு ஆராதனை வழியாக அநேகர் கிறிஸ்துவை அறிக்கையிட்டு ஏற்றுக் கொண்டனர். 31.07.1978-ல் பானிக்காடக் கிராமத்தில் நடைபெற்ற திருமுழுக்கு ஆராதனையிலும் அநேகர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவே தெய்வமென அறிக்கையிட்டனர். குறுகிய இறையியல் பயிற்சிக்காக சேலம், டேனிஷ்பேட்டையிலுள்ள பெத்தேல் வேதாகம பயிற்சி மையத்திற்கு 1979 ஜுலை மாதம் குடும்பமாக அனுப்பப்பட்டு பயிற்சியை 1980 மே மாதம் முடித்தனர். சகோதரர் செல்லப்பா ஒரு சிறிய விபத்தில் காலில் அடிபட்டு சிகிச்சை எடுத்து வந்தார், மருத்துவ விடுப்பிற்குப் பின் அவர்களை வியாராவிற்கு பணியாற்ற அனுப்பினார்கள். பின் சோன்காட் பணித்தளத்தை மையமாக வைத்து பணிகளைத் தொடர்ந்தார்கள். மறுபடியும் வியாராவிலுள்ள பணித்தள அலுவலகத்தில் ஓராண்டு பணியாற்றியபின் பணித்தள சமுதாயநலப்பணிகளை கண்காணிக்கும் பொறுப்பை 1983 பெப்ரவரி முதல் ஏற்று செயல்பட்டு வந்தார்கள். பின்பு 1985ஆம் ஆண்டு கோவையை மையமாகக் கொண்டு மிஷனெரி தரிசன விரிவாக்கப்பணி ஊழியத்தைச் செய்தார்கள். திருச்சபைகளுக்குள் சென்று மிஷனெரிப் பணியின் அவசியம், ஜெபத்தின் முக்கியத்துவம், ஜெபக்குழுக்களின் தேவை இவைகளை அறைகூவலாக பறைசாற்றி பணியாற்றி வந்தார். 1988 ஏப்ரல் முதல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைமைச் செயலகத்தில் தொடர்புத்துறையில் சில ஆண்டுகள் அர்ப்பணத்துடன் ஊழியம் செய்து வந்தார்கள்.

இறுதி நாட்கள்

ஆண்டவர் கொடுத்த தேவபணியைச் செய்து வந்த செல்லப்பா ஞானசேகரன் சுகவீனத்தினிமித்தம் சிகிச்சை பெற்று வந்தார்கள். மருத்துவமனையில் சில நாட்கள் சிகிச்சைபெற்று சுகம் பெற்று வந்து பணியைத் தொடர்ந்தார்கள். 12. 03. 1996 அன்று காலை சுமார் 7. 30 மணியளவில் மாரடைப்பால் தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்தார்கள். அவரது அடக்க ஆராதனை சி. எஸ். ஐ. பரி. ஜேம்ஸ் ஆலயம், அயனாவரத்தில் நடைபெற்று, கீழ்பாக்கம் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தன்னுடைய ஓட்டத்தை வெற்றியாக முடித்த அவர்களுக்காக ஆண்டவரைத் துதிப்போம்.

இன்று அரசு வேலைக்காக காத்திருக்கும் போது, பார்த்துக்கொண்டிருந்த அரசு வேலையைக்காட்டிலும் தேவனுடைய பணி செய்வதுதான் பாக்கியம் என்று தன் குடும்பத்தோடு அர்ப்பணித்த சகோதரர் செல்லப்பா அவர்களின் வாழ்வு நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. கல்லூரிகளில் உள்ள வாலிபரே, ஆலயங்களில் உள்ள இளைஞரே வட தேசம் செல்ல வாருங்கள். விடுதலை செய்தியைக் கூறுங்கள்.

- Maraka Mudia Mamanithargal Vol-2



# புதிய வானம் புதிய பூமி

## அதில் வாழ நம்மை நாம் எப்படி தகுதிப்படுத்துவது?

புதிய பூமியில் வாழ நம்மைத் தகுதிப்படுத்த வேண்டியவை பற்றி பார்க்கும் முன் யார்யார் இதில் பிரவேசிக்க முடியாது என்பதை அறிந்து கொள்வது நல்லது. வெளி 21:8ஆம் வசனத்தில் இதற்கான விடையை நாம் கண்டு கொள்ளலாம். இந்த வசனத்தில் குறிப்பிட்ட குணங்கள் உள்ளவர்களை அவிசுவாசிகள் என்ற பட்டியலில் நாம் கொண்டுவந்து விடலாம்.

புதிய வானமும், புதிய பூமியும், புதிய எருசலேம் நகரமும் விசுவாசிகளுக்கே உரியவையாகும். இதில் கொஞ்சமும் சந்தேகப்படவேண்டிய அவசியமில்லை. எனவே முதலாவது நான் இயேசுவினால் மீட்கப்பட்டவன் அல்லது இரட்சிக்கப்பட்டவன் என்ற நிச்சயம் வேண்டும். ஆண்டவர் தனது சிலுவை மரணத்தின் மூலம் நமக்கு ஒரு பெரிய இரட்சிப்பை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். அந்த இரட்சிப்பை நாம் பெற்றுக்கொண்டோம் என்ற முழுமையான விசுவாசம் வேண்டும்.

இரட்சிப்பை பெற்றுக்கொண்டது மட்டுமல்ல, அதை முடிவுவரை காத்துக் கொள்ள வேண்டும். அதாவது நமது மரணம் வரை அல்லது இயேசுவின் இரண்டாம் வருகை வரை இந்த இரட்சிப்பைக் காத்துக் கொள்ள வேண்டும். இரட்சிப்பின் நிச்சயமில்லாத எந்த ஒரு நபரும் இந்த பெரிதான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள முடியாது. இரட்சிப்பின் நிச்சயம் மட்டுமல்ல, கடைசிவரை அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும். நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் கடவுளை மகிமைப்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும்.

யார்யார் ஆண்டவரின் வருகையில் அவரோடு எடுத்துக் கொள்ளப்படுகிறார்களோ, அவர்கள் நிச்சயம் இந்த புதிய வானம், புதிய பூமியில் வாசம் பண்ணுகிறவர்களாக மாறுவார்கள். ஒருவேளை அவரது வருகைக்கு முன்பாக மரணத்தை காண்பவர்களாக இருந்தால் அவர்கள் கர்த்தருக்குள் மரித்தால் நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் கட்டாயம் இந்த புதிய ஆசீர்வாதத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

நம் தேவன் எல்லாவற்றையும் புதிதாக்குகிறார். ஒரு தனிப்பட்ட மனிதனுடைய வாழ்க்கையில் குறுக்கிட்டு அவனை ஒரு புது மனிதனாக மாற்றுகிறவர். சமுதாயத்தை சீர்ப்படுத்தி புதுமையான ஒன்றாக மாற்றுகிறவர். இப்படி எல்லாவற்றையும் புதிதாக்குகிறவர் நாம் வாழும் இந்த பூமியையும், புதியதாக மாற்றுகிறார். ஒருவேளை வாழ்வின் கசப்பான அனுபவங்களையே எண்ணி இப்படித்தான் என் வாழ்க்கை கடைசிவரை இருக்குமோ என்று மனம் சலித்துவிட வேண்டாம். அவர் எல்லாவற்றையும் புதிதாக்குகிறவர். உன் வாழ்வையும் முற்றிலும் புதுமையான ஒன்றாக மாற்றுவார். புதிய வானத்தையும், புதிய பூமியையும் படைக்கும் நம் ஆண்டவர் உன் வாழ்வையும் புதிதாக்குவார். அவரிடம் உன் வாழ்க்கையை ஒப்புக்கொடு, எல்லாம் புதிதாக மாறும்.

முந்தினவைகளை நினைக்க வேண்டாம். பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்; இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா?... (ஏசாயா 43:18,19).

- Rev. David Ponding

# கர்நாடக மாநில முகாம்

## வாலிபர் பிரிவு

### கூடுகையின் ஆசீர்வாதங்கள்



ஆண்டவரும் அருமை இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

அக்டோபர் மாதம் 22,23 ஆகிய தேதிகளில் பெங்களூரில் உள்ள இந்திய கேம்பஸ் குருசேட் ஃபார் கிரைஸ்ட் கன்வென்ஷன் ஹாலில் முகாமை நடத்த கர்த்தர் கிருபை செய்தார். நமது இயக்கத்தின் வாலிபர் பிரிவு பொறுப்பாளர் Rev.டேனியேல் அருள்மணி அண்ணன் ஜெபித்து கூடுகையை துவக்கி வைத்தார்கள். இந்த கூடுகைகளில் நமது இயக்கத்தின் தலைவர்கள் Rev. ஜாண் பெர்லின் (பொதுகாரியதரிசி) Rev. I.K ஆபிரகாம் அண்ணன் மற்றும் Rev. பால்சாலமோன் அண்ணன் அவர்கள் தேவ வார்த்தையை பகிர்ந்து கொண்டனர்.

இந்த இரண்டுநாட்களும் நமது பணித்தளமிஷனெரிகள் குஜராத்திலிருந்து திரு. ஹென்றி அண்ணன் குடும்பம், ஹுப்லி பகுதியில் இருந்து திரு. நரேந்திர குமார் மற்றும் திரு. ஜோசப் அவர்களோடு நமது சுதேச ஊழியர்கள் விசுவாசிகள் தங்களது ஊழிய அனுபவங்களையும், வாழ்வின் சாட்சிகளையும் பகிர்ந்து கொண்டது, கலந்து கொண்ட வாலிப உள்ளங்களுக்கு, மிகவும் பிரயோஜனமாயும், ஊழிய வாஞ்சையையும் ஏற்படுத்தியது. மேலும் குழுவாக கலந்துரையாடின நேரங்கள் நடைமுறை செய்திகளும் வாலிபர்கள் தீர்மானம் எடுக்க ஏதுவாயிருந்தது.

<u>வாலிபர் கூடுகையில் கலந்து கொண்ட சில வாலிபர்களின் சாட்சிகள்:</u>

- ☞ நான் முதன்முறையாக இந்த கூடுகைக்கு வந்தேன், என் இரட்சிப்பின் அனுபவத்தை புதுப்பித்துக்கொண்டேன். இயேசு கிறிஸ்துவை அதிகமாய் அறிந்துகொண்டேன் – சுதா மேரி
- ☞ ஊழியத்தின் சுமையை அறிய மிகவும் பிரயோஜனமாகவும் இருந்தது – காப்ரியேல் ஜோஹான்
- ☞ மிகவும் நன்றாய் இருந்தது, ஊழியத்திற்கு செல்ல ஊக்குவிக்கப்பட்டேன் – ஞானராஜ்
- ☞ ஜெபம் என்பது ஒருவருடைய என்னத்தையும், மனதையும் தேவனுக்கு நேராக அல்லது நற்காரியங்களுக்கு நம்மை எழுப்புகிறது, ஜெபம் தேவனோடு தொடர்பு மற்றும் தேவன் தன்னுடைய தாகத்தை நம்மோடு பகிர்ந்துகொள்ளுதல். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவை நான் நேசிக்கிறேன் – மிதாஸ்ரீ
- ☞ இந்த கூடுகை பிரயோஜனமாய் இருந்தது, தேவபணிக்காக தன்னார்வ ஊழியம் செய்ய அர்ப்பணிக்கிறேன். – ரிதிகா கேத்ரின்
- ☞ எல்லா ஊழியர்கள் மூலமாய் தேவன் என்னோடு பேசுகிறதை நான் உணர்ந்தேன் – ரேச்சல் ஜேம்ஸ்
- ☞ இந்த கூடுகை நான் இழந்த ஆவிக்குரிய வாழ்வை புதுப்பிக்க அமைந்தது – எஸ்தர் இவாஞ்சலின்
- ☞ இது போன்ற கூடுகை தொடர்ச்சியாக வைக்கவேண்டுமென விரும்புகிறேன் – செல்வின் காந்த்

இந்த நாட்களில் மொத்த பங்குபெற்ற வாலிபர்கள் மற்றும் வாலிபர்குழு தலைவர்களின் எண்ணிக்கை 155. தங்கள் படிப்பு முடித்து முழுநேரப்பணியில் இணைய அர்ப்பணித்தவர்கள் 13, தன்னார்வமாக ஊழியத்தில் ஈடுபட அர்ப்பணித்தவர்கள் 19, ஜெபத்திற்கு அர்ப்பணித்தவர்கள் 34 மற்றும் பணித்தளத்தை சந்திக்க விரும்புவோர் 21. வரும் நாட்களில் இந்த வாலிபர்களைக் கொண்டு இந்த கர்நாடக மாநிலத்தில் தேவன் பலத்த காரியம் செய்ய, தேசத்தில் தேவ இராஜ்ஜியம் கட்டப்பட வேண்டுமென தொடர்ந்து ஊக்கமாய் ஜெபியுங்கள்.

சகோ. ஆனந் குமார் செல்வராஜ் (FMPB பெங்களூரு)

ஞானமுள்ளவர்கள் எப்பொழுதும் ஆலோசனை பெற்று வாழ்கின்றனர். "மதியீனனுடைய வழி அவன் பார்வைக்கு செம்மையாயிருக்கும்; ஆலோசனைக்குச் செவி கொடுக்கிறவனோ ஞானமுள்ளவன்" (நீதி 12:15) "உன் அந்தியகாலத்தில் நீ ஞானமுள்ளவனாயிருக்கும்படி, ஆலோசனையைக் கேட்டு, புத்திமதியை ஏற்றுக்கொள்"(நீதி 19:20) "இருதயத்தில் ஞானமுள்ளவன் கட்டளைகளை ஏற்றுக்கொள்ளுகிறான்; அலப்புகிற மூடனோ விழுவான்" (நீதி: 10:8)

<u>நாம் ஏன் ஆலோசனைகளை பொதுவாய் கேட்பதில்லை?</u>

நம்மிடமுள்ள இரண்டு தவறான மனப்பான்மைகள்தான் நாம் ஆலோசனை பெற தடையாக இருக்கின்றன. முதலாவது, நம்முடைய தற்பெருமை. ஒருபுறம் நமக்கு ஏற்கனவே தெரிந்தது தானே என்ற நோக்கம். மறுபுறம் பிறரிடம் ஆலோசனை கேட்பது ஒரு பெலவீனம் என்ற சிந்தனையும் பெரிய தடைகள். இரண்டாவதாக, நாம் எடுத்த முடிவில் மாற மனதில்லாமல் பிடிவாதமான மனபாங்குதான் ஒரு தடையாய் அமைகிறது.

<u>நாம் யோசனை கேட்கக் கூடிய சிறந்த ஆலோசனை கருவிகள் எவை?</u>

- வேதத்தின் ஆலோசனை
- ஜெபத்தினால் கிடைக்கும் ஆலோசனை
- தேவ மனிதர்களின் ஆலோசனை
- கணவன்/ மனைவியின் ஆலோசனை
- பெற்றோரின் ஆலோசனை

நாம் ஆலோசனைக்காக நாடக்கூடிய முதல் இடம் நம் மனைவி/ கணவனாகத்தான் இருக்க வேண்டும். இதனால் நல்லுறவும் மலரும். முக்கியமாக கணவர்கள் தங்கள் மனைவிகளுடன் கலந்து ஆலோசித்து முக்கியமான முடிவெடுக்கும் போது, அது எதிர்கால வளர்ச்சிக்கும் ஏதுவாய் அமையும். இதையே தான் சாலொமோன் ராஜாவும் பிரசங்கி 4:9-12 இல் கூறுகிறார். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே... ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்துநிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது.

இரண்டவதாக நாம் ஆலோசனைக்காக நாடக் கூடியவர்கள் நம் பெற்றோர். முதிர்ந்த அனுபவமும் ஞானமுள்ள நம் தாய்/தந்தையிடம் நிச்சயமாக ஆலோசனை பெற்றுக் கொள்ள முடியும். அதுமட்டுமின்றி பல்துறை வல்லுனர்களான மருத்துவர், வக்கீல்கள் போன்றவர்களுடைய ஆலோசனையும் நமக்கு தேவை.

<u>ஆலோசனைக்கான சிறந்த இடம் எது?</u>

ஏசாயா 9:6ல் நாம் காண்பது போல் தேவன்தாமே ஆலோசனைக் கர்த்தாவாக விளங்குகிறார். சங் 32:8 "நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்" சங் 73:24 "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" சங் 16:7 "எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்; இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும்"

<u>ஆலோசனை கர்த்தாவிடம் ஆலோசனை பெறுவது எப்படி?</u>

நிலமானது பல்வேறு வழிகளில் நீரினை பெற்றுக்கொள்கிறது. மழை மூலம் தெளிந்த சுத்தமான நீரை நிலம் பெறுகிறது. ஆனால் அன்றாடகம் மழை பொழிவது கிடையாது. ஆறுகள் மற்றும் வாய்கால்கள் மூலமாக தினம் தினம் நீர் கிடைக்கலாம். ஆனால் அத்தகைய நீர் குப்பைகள் மற்றும் பல அசுத்தங்கள் கொண்டிருக்கும். ஆகவே சுத்தமான மற்றும் அன்றாடகம் கிடைக்கும் நீர் நிலத்தடி நீர் தான்.

# ஒரு ஞானமுள்ள



அதே போல் ஒரு சில நேரங்களில் தேவன் நம்மோடு நேருக்கு நேர் பேசுவது உண்டு. இது நிலத்திற்கு மழை மூலம் கிடைக்கும் நீருக்கு ஒப்பாகும். பல நேரங்கள் சிறந்த உபதேசியார்களின் போதனைகளையும், ஆவிக்குரிய தலைவர்களின் வார்த்தைகளையும் புத்தகங்கள் மூலமாகவும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலமாகவும் பார்க்கிறோம். எப்பொழுதும் கிடைத்தாலும் இத்தகைய வெளிப்பாடுகள் 100% சுத்தமென்றோ, முழுமையானதென்றோ கூற முடியாது. ஆகவே தேவனிடமிருந்து ஆலோசனைப் பெற சிறந்த வழி நிலத்தடி நீருக்கு ஒப்பான வேத வசன ஆய்வு தான். நிலத்தை தோண்டி நீர் பெறுவது போல வேதத்தை ஆழமாய் ஆராய்ந்து சத்தியத்தை பெற்றுக்கொள்வதே சிறந்த வழியாகும்.

எபி 4:12 தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.

<u>எத்தகைய ஆலோசனையை நாம் தவிர்க்க வேண்டும்?</u>

சங் 1:1 “துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,..”

குறி சொல்பவர்கள், ஆன்மீக வாதிகள் மற்றும் நாடி/ வாஸ்து சாஸ்திர நிபுணர்களை நாம் தேடக்கூடாது. வேதத்தின் அடிப்படையில் எல்லா ஆலோசனைகளையும் ஒப்பிட்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

லேவி 19:31 “அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி, குறிசொல்லுகிறவர்களைத் தேடாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்படவேண்டாம்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்”

- Mr. Vinoth Solomon



# மனிதரின் அறிகுறி என்ன?

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
இளைஞர் பிரிவு
50
இளைஞர் இயக்கமாய் தொடருவோம்
ஆண்டுகள் கிறிஸ்துவோடு
1973 - 2023

பொன்விழா ஆண்டு

**வாலிபர் முகாம்**

**கருப்பொருள்:**

## நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்

ஆகாய் 2:23

**14.01.2023** (சனிக்கிழமை) காலை 7.00 மணி முதல் ▶ **16.01.2023** (திங்கட்கிழமை) மதியம் 2.00 மணி வரை

செய்தியாளர்கள்

**சுவி. சுசி பிரபாகரதாஸ் | சகோ. C. ரெஜினால்டு**

**சகோ. S. ஜாண் பெர்லின் | சகோ. Y. நவநீதர்**

**மற்றும் பணித்தள ஊழியர்கள்**

இடம்: **ஜெயராஜ் அன்னபாக்கியம்**

**சி.எஸ்.ஐ. பொறியியல் கல்லூரி வளாகம்,**

**நாசரேத்,** தூத்துக்குடி மாவட்டம்

பதிவுக் கட்டணம் ரூ.100/-

**ஜெபியுங்கள் | பங்குபெறுங்கள் | அழைத்து வாருங்கள்**

தொடர்புக்கு: **FMPB,** 29. உயர்நிலைப்பள்ளி சாலை. அம்பத்தூர். சென்னை- 600053

☎044-26570404. 9488441113. 9444393228. 9443175740. 9445040148. 9445119789

---



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

PENDRIVE

VOL-4

**ALL FMPB CHRISTMAS SONGS**

*The One Birth that change all mankind*